Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷஃபான் 21 (28.10.2002) திங்கட்கிழமை இதழ் : 28

**LIONAIR** இப்போது இரண்டு சேவைகள்

தினசரி சேவை

காலை 7.15 கொழும்பு - யாழ்.
காலை 9.15 யாழ். - கொழும்பு

புதன் தவிர்ந்த ஏனைய நாட்களில்

மாலை 3.15 கொழும்பு - யாழ்.
மாலை 5.00 யாழ். - கொழும்பு

பயணக் கட்டணம்
ரூபா 1,999/= மட்டுமே!!

Hotline - 0777-382343, 072-401423, 01-343125.

(சி-052)

# யாழ். நகரக் கரையோரம், அரியாலை, தென்மராட்சி

# மீள்குடியமர்வுக்கு மக்கள் அனுமதிக்கப்படுவர்!

## களநிலையை நேரில் பார்வையிட அரச அதிகாரிகள் நாளை விஜயம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.நகரக் கரையோரப் பகுதியிலும், அரியாலை மற்றும் தென்மராட்சியின் பல பகுதிகளிலும் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.**

இதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக யாழ்.படைத்தரப்பின் உயர் அதிகாரிகளும் அவ்வப் பகுதிகளின் பிரதேச செயலர்களும் இணைந்து நாளையதினம் குறிப்பிட்ட பகுதிகளுக்கான களநிலை விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இப்பகுதிகளில் மக்களின் மீள் குடியமர்வு நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்கு வசதியாக படை நிலைகளில் மாற்றம் செய்யும்படி யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டதற்கமையவே மேற்படி நடவடிக்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



ஒருக்கா பின்பக்கத்தைப் பாருங்கோ. சங்கரியார் சறுக்கிறார் போல கிடக்கு...

## வாழப்பாடி ராமமூர்த்தி மாரடைப்பால் மரணம்!

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவரும் பிரபல அரசியல் வாதியும் முன்னாள் மத்திய அமைச்சருமான வாழப்பாடி இராமமூர்த்தி மாரடைப்புக் காரணமாக மரணமடைந்தார்.

சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட அவர் அங்கு நேற்றுக் காலமானார்.

சேலம் மாவட்டத்தில் பிறந்த இவர் - 1991ஆம் ஆண்டு மத்திய அமைச்சரவையில் தொழில் அமைச்சராகவும் 1998, 1999ஆம் ஆண்டு காலப்பகுதியில் பிரதமர் வாஜ்பாயின் கூட்டரசாங்கத்தில் பெற்றோலியத் துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.



தமிழ்நாடு காங்கிரசில் இருந்து பிரிந்து 1998ஆம் ஆண்டு தமிழக ராஜீவ் காங்கிரஸ் என்ற கட்சியை உருவாக்கியிருந்த இவர் பின்னர் மீண்டும் தாய்க்கட்சியுடன் இணைந்தார்.

ஈழத்தமிழர் பற்றிய காட்டமான விமர்சனங்களை இவர் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாகர்கோயிலில் குடியமர்வது பற்றி செயலகத்தில் நாளை ஆராயப்படும்!

### உசன் கூட்டம் முடிவு ஏதுமின்றி முடிந்தது

(வடமராட்சி கிழக்கு)

நாகர்கோயில் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக நேற்று உசனில் நடந்த கூட்டத்தில் முடிவுகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

நாகர்கோயில் கிழக்கு, மேற்கு, தெற்குப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்றுக்காலை 11 மணியளவில் உசன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்துக்கு 523ஆவது பிரிகேட்டின் கட்டளை அதிகாரி தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக எந்த முடிவும் எடுக்கப்படாதநிலையில் நாளை யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் ஆராய்வதென முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மீள் குடியேற்ற முன்னேற்பாட்டுக் குழுத் தலைவர் க.ஆனந்தமூர்த்தி, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதப்பிள்ளை ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## எட்டு மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிக்க சந்திரிகா மறுப்பு!

(கொழும்பு நிருபர்)

எதிர்வரும் டிசெம்பர் 31ம் திகதியுடன் இராணுவத்தில் உள்ள எட்டு மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையில் இவர்களுக்கான சேவை நீடிப்பை வழங்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கவில்லை எனத் தெரியவருகிறது.

மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தன, மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா, மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, மேஜர் ஜெனரல் சூல செனவிரத்ன, மேஜர் ஜெனரல் நந்தா மல்லவாராச்சி, மேஜர் ஜெனரல் சரத பொன்சேகா, மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட ஆகியோரே இவ்வருட இறுதியுடன் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

இவர்கள் சேவை நீடிப்பு வழங்கு

(10ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அதிகாரங்கள் சந்திரிகாவிடமிருந்து குறைப்பு; அமைச்சரவை அனுசரணையுடன் புதிய குழுவிடம் பொறுப்பு!

### பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம் அடுத்த மாதம் தாக்கலாகின்றது



(கொழும்பு நிருபர்)

பாதுகாப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருந்துவரும் அதிகாரங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் புதிய சட்டமூலம் ஒன்றினை பாராளுமன்றத்தில் கொண்டுவரவுள்ளது.

முப்படைகளினதும் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இருந்து வரும் அதிகாரங்களைக் குறைப்பதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது முப்படைகள் தொடர்பாக ஜனாதிபதி கொண்டிருக்கும் அதிகாரங்களைக் குறைத்து அந்த அதிகாரத்தை பாதுகாப்பு மீளமைப்புக் குழு என்ற பெயரிலான ஒரு குழுவிடம் கையளிக்க இந்தச் சட்டமூலம் வழிவகை செய்யும்.

பாதுகாப்பு மீளமைப்புக் குழுவின் தலைவராக முப்படைகளில் நிரந்தர சேவைத்தரத்திலுள்ள ஒரு அதிகாரியை அமைச்சரவையின் பரிந்துரையுடன் ஜனாதிபதி நியமிக்க வழிவகை செய்யப்படும்.

இக்குழுவில் முப்படைகளின் பிரதம தளபதிகளும் இடம்பெற்றிருப்பர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இந்தக் குழுவில் செயலாளராகப் பணியாற்றுவார் எனத்தெரிய வருகின்றது.

இந்தக் குழுவுக்கு, ஆலோசனைகளை வழங்கும் அதிகாரத்தை அமைச்சரவை கொண்டிருக்கும், இந்தக் குழுவே முப்படைகளினதும் நடவடிக்கைகளை வழிநடத்துவதுடன் இது தொடர்பான முழு அதிகாரங்களையும் கொண்டிருக்கும் எனவும் தெரியவருகின்றது.

உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவது தொடர்பான முடிவுகளை, ஜனாதிபதி சந்திரிகா இத்துறையில் அதிகாரம் வைத்திருக்கும் வரையில் அமுல் நடத்த முடியாதென்பதாலேயே அரசாங்கம், இந்த பாதுகாப்பு மீளமைப்புக் குழுவை அமைக்க முடிவு செய்து செய்துள்ளது.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஏற்கனவே பெறப்பட்டிருக்கின்றது. அடுத்த மாதம் இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## புதிய இராணுவத் தளபதி நியமனம்; ரணில் - சந்திரிகா இழுபறிநிலை!

(கொழும்பிலிருந்து அருள்)

மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தனவை இராணுவத் தளபதியாக நியமிக்கும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

புதிய இராணுவத்தளபதியாக மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தனவை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து- திலக் மாரப்பன ஜனாதிபதிக்கு மேஜர் ஜெனரல் குணவர்த்தனவை இராணுவத் தளபதியாக நியமிக்குமாறு சிபாரிசு செய்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி இந்த நியமனம் வழங்குவதை நிராகரித்துள்ளார்.

இதனால் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகல் நிலை மீண்டும் ஏற்பட்டிருக்கின்றது மேஜர் ஜெனரல் லோஹான் குணவர்த்தனவை இராணுவத் தளபதியாக நியமிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா மறுப்புத் தெரிவித்திருப்பதற்கான காரணங்கள் பற்றிய விபரமும்

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் இலக்கியச்சோலை, விருந்தினர் பக்கம்

# திருமலை மாவட்டத்தில் யுத்தத்தினால் விதவைகளானவர்கள் 8 ஆயிரம் பேர்!

(திருகோணமலை)

"வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் 8000 பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். 12 அகதிகள் முகாம்களிலும் 1,000 குடும்பங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர்".

- இவ்வாறு திருகோணமலை மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் புகேந்திரன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் நடத்திய சர்வதேச அஞ்சல் தின நிகழ்வுகள் நேற்று திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திருகோணமலை பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் என்.ரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் திட்டமிடல் பணிப்பாளர் புகேந்திரன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

இந்த நாட்டில் தற்போது நிலவுகின்ற சமாதானச் சூழல் நிரந்தர சமாதானத்தை விரைவில் கொண்டு வராதா? என்ற எண்ணம் அநேகர் மத்தியிலும் நிலவுகின்றது.

நாடுபூராவும் 375 அகதிகள் முகாம்கள் இருக்கின்றன. அவற்றில் 22 ஆயிரம் குடும்பங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். இம்மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு சமாதானச் சூழ்நிலை அவசியமாகின்றது. இம்மக்களைப் பராமரிப்பதற்கு மாதாந்தம் 50 மில்லியன் ரூபாய்களை அரசாங்கம் செலவிட வேண்டியுள்ளது. இவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேலதிகமாக 30 மில்லியன் ரூபாய்களை செலவிட வேண்டியுள்ளது. இத்தொகை அபிவிருத்திக்கு செலவிடப்படுமாயின் எமது நாடு அபிவிருத்தி அடையும். நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமாயின் அகதி முகாம்களில் உள்ள மக்கள் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இன்று சர்வதேச சமூகத்தினரும் இலங்கையில் சமாதானம் தேவை என்பதில் ஆர்வமாக இருக்கின்றார்கள் என்றார்.

## சாவகச்சேரியில் மனையியல் பயிற்சிநெறி

(மீசாலை)

சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் - மனையியல் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

18 - 40 வயதிற்குட்பட்டவர்கள் இப்பயிற்சிநெறியில் கலந்துகொள்ள முடியும். ஆர்வமுள்ளவர்கள் தமது கல்விச் சான்றிதழ்கள், சுயவிபரக் கோவை - என்பவற்றினை பொது முகாமையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் எனும் முகவரிக்கு 31ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (25)

## திருமறைக் கலாமன்றக் கலந்துரையாடல்

யாழ். திருமறைக் கலாமன்ற அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்றக் கலைத்தூது மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து மன்ற அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (43)

## அம்பாறை - கொழும்பு விமான சேவை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை

(நமது நிருபர்)

கொழும்புக்கும் அம்பாறைக்கும் இடையிலான விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது. உள்நாட்டு விமான போக்குவரத்து சேவைகளை அதிகரிப்பதனூடாக உல்லாசப் பயணிகளைக் கவர்வதற்கான ஒரு திட்டமாகவே அம்பாறை - கொழும்பு விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்காக அம்பாறை விமான நிலையத்தை திருத்தியமைக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்பணிகள் பூர்த்தியடைந்த பின்னர் அடுத்த மாதமளவில் விமான சேவைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரியவருகிறது.

யுத்தநிலை காரணமாக உள்நாட்டு விமான சேவைகள் முற்றாகச் செயலிழந்திருந்ததும் இதனால் உல்லாசப் பயணிகள் வரவு வீழ்ச்சியடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் உள்ளூர் விமான சேவைகளை மீள ஆரம்பித்து உல்லாசப் பயணிகளை கவாவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## மன்னாருக்கு விஜயம் செய்த அமைச்சர் குழு

## இறங்குதுறையை மீனவரிடம் கையளிப்பது குறித்து கடற்படையினருடன் பேச்சு!

(வவுனியா)

கடற்தொழில், நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த விஜேசேகரா மற்றும் வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்டின் மசூர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

இவர்கள் நேற்று மன்னார் கச்சேரிக்கு விஜயம் செய்த பின்னர் மன்னார் விடுதலைப்புலிகளின் அரசியற்துறையினரையும் சந்தித்துள்ளனர். பின்னர் பேசாலை, வங்காலைப்பாடு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் செய்ததுடன் 'விக்ரரிஸ்' கிராமத்தில் நூறு வீடுகள் அமைக்கும் திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

தலைமன்னார் இறங்குதுறைக்கு விஜயம் செய்த இவர்கள் மீனவருடன் கலந்துரையாடியிருந்தனர். கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் தலைமன்னார் இறங்குதுறையை மீனவர்களிடம் கையளிப்பது தொடர்பாகவும், கடற்படையினருடன் கலந்துரையாடியதுடன் எருக்கலம்பிட்டிக்கும் மேற்படி குழுவினர் விஜயம் செய்துள்ளனர். (03)

## கொழும்பு - மட்டு. ரயில் சேவை டிசெம்பரில் மீண்டும் ஆரம்பம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவைகள் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

சுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக கொழும்பு - மட்டக்களப்பு ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. மட்டக்களப்புக்கான ரயில்கள் வெலிக்கந்த வரையிலுமே சேவையில் ஈடுபட்டு வந்தன.

புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்த பின்னர் இந்த ரயில் சேவைகள் வாழைச்சேனை வரை நீடிக்கப்பட்டன. தற்போது வாழைச்சேனை வரை நடைபெற்று வரும் ரயில் சேவையை மட்டக்களப்பு வரை நீடிப்பதற்காக ரயில் பாதைகளைச் சீர்செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ரயில் பாதை சீர்செய்யப்பட்டதும் டிசெம்பரில் ரயில் சேவைகளை மட்டக்களப்பு வரை நீடிக்க முடியும் எனவும் ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

## இரத்தம் வழங்கக் கோரிக்கை

(வண்ணை)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு சகல பிரிவு இரத்தமும் பற்றாக்குறையாக உள்ளதால் உடனடியாக இரத்தம் வழங்கி உதவுமாறு நலன்விரும்பிகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இரத்ததானம் செய்ய விரும்புவோர், தினமும் இரத்ததானம் செய்ய முடியும் எனவும், நிறுவனங்கள் ஒழுங்கு செய்தால் அந்த அந்த இடங்களில் வந்து இரத்தம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் எனவும் வைத்தியசாலை இரத்தவங்கி பொறுப்பதிகாரி தெரிவித்தார். (111)

## விளையாட்டு

## பங்களாதேஷுக்கு எதிராக தெ.ஆபிரிக்க வீரர்கள் மூவர் சதம் அடித்தனர்

(கேப்டவுண்)

தென் ஆபிரிக்காவிற்கு கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும் தென் ஆபிரிக்கா அணிக்கும் இடையே பொஸரோமில் நடைபெறும் 2ஆவது ரெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேறறைய மூன்றாவது நாள் மதியபோசன இடைவேளையின் போது பங்களாதேஷ் அணி அதன் இரண்டாவது இன்னிங்சில் இரண்டு விக்கெட் இழப்பிற்கு 46 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பங்களாதேஷ் முதல் இன்னிங்சில் 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தென் ஆபிரிக்கா முதல் இன்னிங்சில் 5 விக்கெட் இழப்பிற்கு 482 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது இதில் காரி கிரிஸ்டன் 160 ஓட்டங்களையும் ஜக் கலிஸ் ஆட்டம் இழக்காமல் 139 ஓட்டங்களையும் கிப்ஸ் 114 ஓட்டங்களையும் பெற்றனர்.

## கால்நடைகளைக் கட்டி வளர்க்க கமநல உத்தியோகத்தர் கோரிக்கை

(தென்மராட்சி)

தென்மராட்சியின் பல பிரதேசங்களிலும் காலபோக நெற்செய்கை நடைபெற்று வருவதனால் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு கமநல சேவையின் பெரும்பாக உத்தியோகத்தர் சொ.சத்தியேந்திரன் தெரிவித்துள்ளார்.

கால்நடைகளை கட்டி வளர்க்காததால் பயிர்ச்செய்கை கடுமையாகப் பாதிப்புக்குள்ளாவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு திரியும் கட்டாக்காலி "குழு மாடுகளை" கட்டுப்படுத்தவோ அல்லது பிடிக்கவோ யாழ் மாவட்டத்தில் கால்நடை பிடிகாரர்கள் இல்லாத காரணத்தால் பல இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் பெரும்பாக உத்தியோத்தர் மேலும் தெரிவித்தார். (25)

## புன்னாலைக்கட்டுவன் வடக்கில் விவசாய முயற்சிகள்

(புன்னாலைக்கட்டுவன்)

இராணுவத்தினரால் அண்மையில் மீளக்குடியமர அனுமதி வழங்கப்பட்ட பகுதிகளான, புன்னாலைக்கட்டுவன் வடக்கு மற்றும் நாச்சிமார் கோயிலடிப் பகுதியில், பெரும்போகச்செய்கைக்கு ஏற்ற தயார்படுத்தலில் விவசாயிகள் ஈடுபடுவதனைக் காணமுடிகிறது.

இவர்கள் இங்கு இராணுவத்தினர் அமைத்திருந்த பாரிய பாதுகாபபு மண் அரண்களை அப்புறப்படுத்துவதுடன் மண் அரண்களை அண்டிய பயிர் நிலங்களை செப்பனிடுவதையும் பயிர்ச்செய்கைக்குத் தயாராக உள்ள நிலங்களில் எருவைப் பறிப்பதனையும் காணக்கூடியதாகவிருந்தது. (83)

## 'சுதந்திர வேட்கை' நூலின் அறிமுக விழா வவுனியாவில்

(வவுனியா)

அடேல் பாலசிங்கம் எழுதிய சுதந்திர வேட்கை நூலின் அறிமுக விழா கடந்த 25ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா கல்வியற் கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியம் இந்த அறிமுக விழாவை ஒழுங்கு செய்திருந்தது.

இந்நூலுக்கான அறிமுக உரையை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனும், வெளியீட்டு உரையை பேராசிரியர் எல்.மோகனதாஸும், ஆய்வுரையை பத்மாவதி ஜெயச்சந்திரனும், தமிழீழ மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினியும், செ.விந்தனும் நிகழ்த்தியிருந்தார்கள்.

## வடமராட்சி வடக்கிலும் "முதியோர் இல்லம்"

(வடமராட்சி)

வடமராட்சி வடக்குப் பகுதியில் முதியோர் இல்லம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் ஒருவர் இப்பகுதியில் முதியோர் இல்லம் அமைப்பதற்கு ஓர் இடத்தினைத் தெரிவு செய்துதரும்படியும் அதனைத் தான் கொள்வனவு செய்து அதில் முதியோர் இல்லம் ஒன்றினை அமைத்துத்தர விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இதனை அடுத்து பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி முதியோர் இல்லம் அமைப்பதற்குப் பொருத்தமான ஓர் இடத்தினை தெரிவுசெய்து தரும்படி தமது பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சமூக சேவை உத்தியோகத்தர் என். இராசலிங்கம் தெரிவித்துள்ளார். (15)


**விளையாட்டு முகாமையாளர் பதவி வெற்றிடம்**

மேற்படி பதவிக்குத் தகுதியானவர்களிடமிருந்து (சகல துறை விளையாட்டுக்களும்) விண்ணப்பங்கள் 10.11.2002 இற்கு முன்னர் பெறப்படவுள்ளன. 50 வயதுக்கு மேற்படாத திடகாத்திரமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

செயலாளர்,
ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்
(பருத்தித்துறை).

(சி-094)



**SUNDHARSON**
Importers & Distributors of
Electrical Items, P.V.C.pipes & Fittings Etc.

Central Market View, Manipay.
T.P. / Fax : 021 - 2222751

**தீபாவளிப் பரிசுப் போட்டி**

**சுந்தர்சன்**
மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.

உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற் கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக

- மின்சார உபகரணங்கள்
- P.V.C.நீர்க் குழாய்கள், இணைப்புக்கள்
- அலங்காரப் பொருட்களை

நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள

**சுந்தர்சன்** மானிப்பாய்

**தீபாவளி - 2002 பரிசுப் போட்டி விபரம்**

25.10.2002-06.10.2002 வரையிலான காலப்பகுதியில் எமது ஸ்தாபனத்தில் அதி கூடிய தொகைக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யும்

- வீட்டு உரிமையாளர்கள் மூவருக்கும்
- வர்த்தகப் பிரமுகர்கள் மூவருக்கும்
- கட்டட ஒப்பந்தக்காரர்கள் மூவருக்கும்
- மின் இணைப்பாளர்கள் அறுவருக்கும்

அதிசயிக்கத்தக்க பெறுமதிவாய்ந்த பரிசில்கள் காத்திருக்கின்றன.

ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்

மத்திய சந்தை முன்பாக
பிரதான வீதி, மானிப்பாய்.

சுந்தர்சன் உரிமையாளர்
T.P./ Fax - 2222751

(சி-092)

# காஞ்சிரங்குடா படுகொலைகள் குறித்து விசாரிக்கும் ஹரிகுணதிலக ஆணைக்குழுவுக்கு அச்சுறுத்தல்!

## அரசிடம் பாதுகாப்பு கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

காஞ்சிரங்குடாவில் அதிரடிப் படையினரால் ஏழு அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரித்துவரும் மூன்று உறுப்பினர் ஆணைக்குழுவுக்கு இனந்தெரியாத அமைப்பிடம் இருந்து அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது, காஞ்சிரங்குடாப் படுகொலைகள் குறித்து ஓய்வு பெற்ற விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்ஷல் ஹரிகுணதிலக தலைமையிலான மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணை ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவுசெய்து முடித்துள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் சாட்சியங்களைப் பதிவு செய்த பின்னர் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இக குழு சாட்சியங்களை 24 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதிவரை பதிவு செய்தது.

இங்கு சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுக் கொண்டிருந்தபோது 25 ஆம் திகதி திடீரென அங்கு வந்த இனந்தெரியாத நபர் ஒருவர் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

சிவப்பு மையினால் எழுதப்பட்டிருந்த அக்கடிதத்திலேயே ஆணைக் குழு உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது.

அக் கடிதத்தில் "நீங்கள் விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக செயற படுகிறீர்கள். இதனை எமது தலைமை அங்கீகரிக்கவோ, ஏற்றுக்கொள்ளவோ முடியாது. விசாரணைக்குழுவின் இச செயற்பாட்டை இடைநிறுத்தாவிட்டால் பாரிய விளைவுகளுக்கு முகங் கொடுக்க நேரிடும்" என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதையடுத்து மேற்படி விசாரணைக் குழு இந்த விடயத்தை அரசாங்கத்தினது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றது. தமது குழுவின் பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என ஹரி குணதிலக ஆணைக்குழு கோரியுள்ளது.

இவ் ஆணைக்குழு தனது இறுதி அறிக்கையை நாளைமறுநாள் அரசாங்கத்திடம் கையளிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

### கொம்மந்தறையில் 'மனோன்மணி ஓசை' மலர் வெளியீடு

உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறை அருள்மிகு ஸ்ரீமனோன் மணி அம்பாள் திருக்கோயில் "மனோன மணி ஓசை" மகா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா-இன்று மாலை 5மணிக்கு பிரதம குரு சிவஸ்ரீ இ.பாலகிருஷ்ணக் குருக்கள் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் ஆசியுரையை த.சந்திரலிங்கக் குருக்கள், பால பத்மநாதக் குருக்கள், அருட்கவி சி.விநாசித்தம்பி, வைத்திய கலாநிதி கதிரவேற்பிள்ளை ஆகியோரும் - வெளியீட்டுரையை காரை. எம்.பி.அருளானந்தனும் - ஆய்வுரையை, அதிபர் அனந்ததேஸ்வரனும், நன்றியுரையை தர்மகர்த்தா சபைத் தலைவர் நராசிவம் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

# விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுடன் அதிரடிப்படை அதிகாரிகள் அம்பாறையில் சந்திப்பு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நிகழ்ந்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற இச்சந்திப்புக்கான ஒழுங்குகளை சர்வதேச யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் செய்திருந்தனர். கோமாரியில் நிகழ்ந்த இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் ஜனார்த்தனன், மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் அதிரடிப்படையின் உயரதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் அதிரடிப்படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வை வலுப்படுத்தும் நோக்கிலேயே இச் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இச் சந்திப்பில் புலிகளின் முக்கியஸ்தர்களையும், அதிரடிப் படை அதிகாரிகளையும் கண்காணிப்புக்குழு அதிகாரி அறிமுகம் செய்துவைத்தார்.

பிரச்சினைகள் ஏற்படுகின்ற சமயத்தில் இருதரப்பு முக்கியஸ்தர்களும் கலந்துபேசி சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு வசதியாகவே இச்சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

## மட்டக்களப்பில்

# இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் வழங்கப்படும்!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒல்லிக்குளம், கிரான் ஆகிய பகுதிகளிலுள்ள அகதிக் குடும்பங்களுக்கு - மீளக் குடியமர்தல் தொடர்பான கொடுப்பனவுகள் வழங்கும் வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

இவ்வீடமைப்பு மானியக் கொடுப்பனவின் கீழ் - முதற்கட்டமாக ஒல்லிக குளத்தைச் சேர்ந்த 150 இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கும், கிரானைச் சேர்ந்த 120 குடும்பங்களுக்கும் தலா 20 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவென 60 இலட்சம் ரூபாவினை அரசாங்கம் ஒதுக்கீடு செய்துள்ளது.

# வல்லையில் சட்டவிரோத கல் அகழ்வினால் வயல்களுக்குள் உப்பு நீர் புகும் அபாயம்

(நமது நிருபர்)

வல்லை வெளியில் பெருமளவில் சுண்ணக்கற்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டிருப்பதால் வயல் நிலங்களில் உப்புநீர் உட்புகக்கூடிய அபாய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலமாக வல்லை வெளியில் சட்டவிரோதமாக கல் அகழ்வு இடம்பெற்று வந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் கட்டட நிர்மாணப்பணிகள் தீவிரமடைய இப்பகுதியிலிருந்து பெருமளவிலான சுண்ணக் கற்பாறைகள் வெட்டி அகற்றப் பட்டன.

தினமும் முப்பதுக்கும் அதிகமான உழவு இயந்திரங்களில் இப் பகுதியிலிருந்து கற்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

இதனால் வல்லைவெளியில் மேட்டு நிலமாக இருந்த பகுதிகளில் பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன.

மாரி மழை காலத்தில் தொண்டமனாறு கடனீரேரியில் நீர்ப்பெருக்கு ஏற்படுவதால் வல்லைவெளிப் பகுதியில் உவர் நீர் தேங்குவது வழக்கம். தற்போது வல்லையில் மேட்டு நிலங்களில் குழிகள் ஏற்பட்டிருப்பதால் உப்பு நீர் விவசாயச் செய்கைக்கு உட்படுத்தப்படும் வயல்களுக்குள் உட்புகக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது.

வல்லையில் கல் அகழ்வைத் தடை செய்துள்ளதாக அரச அதிகாரிகள் அறிவித்திருந்தும் அதனைத தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதமையால் வல்லையில் வயல நிலங்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

# பண்டத்தரிப்பு - பெரியவிளான் வீதியில் பனைகள் மூலம் மின்சார இணைப்பு!

(காங்கேசன்துறை)

பண்டத்தரிப்பில் இருந்து பெரியவிளான் வரையான கீரிமலை நோக்கிய பிரதான சாலையில் சட்டவிரோதமான முறையில் மின்சாரக் கம்பிகள் கட்டப்பட்டு மின்சாரம் கொண்டுசெல்லப்படுகின்றது. தினமும் இப்பாதையினூடு மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள் என பலதரப்பட்டவர்கள் போக்குவரத்தை மேற்கொள்கிறார்கள். பிரதான போக்குவரத்து பாதையான இப்பாதையில் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல்



பற்றிப் பல மாதங்ககளாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப் படுத்தியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

பாதையின் இருமருங்கிலும் பாதையை ஊடறுத்துச் சென்ற பழைய இராணுவ காவலரண்கள் உள்ளதால் இப்பகுதியில் மிதிவெடி அச்சுறுத்தலும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (71)

# களுவன்கேணி மீன் குளிரூட்டும் நிலைய படை முகாமை அகற்றுமாறு கோரிக்கை

(நமது நிருபர்)

மட்டக்களப்பு, களுவன்கேணி மீன் குளிரூட்டும் நிலையக் கட்டடத்தில் உள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேற வேண்டுமென அப்பிரதேச மக்கள் கோரி வருகின்றனர்.

மேற்படி பிரதேசத்தில் வாழும் 95சதவீதமானோரது பிரதான தொழில் கடற்தொழிலாகவே உள்ளது. இந்நிலையில் கடந்த வருடம் முதல் இங்கு இயங்கிவரும் முகாமினால் பல்வேறு சிரமங்கள் தமக்கு ஏற்படுவதுடன்-முக்கியமான இரண்டு வீதிகளும் படையினரால் மூடப்பட்டுள்ளன.

இதற்கு முன்னரும் பல தடவைகள் இங்கு படையினர் முகாமிட்டிருந்ததால் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வந்த மக்கள்-புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்ட பின்னரும் இவ்வாறிருப்பது தமக்குக் கவலை தருவதாகத் தெரிவிக்கின்றனர்.

களுவன்கேணிப் பிரதேசக் கடற்தொழிலாளர்களின் நலன் கருதி 1970ஆம் ஆண்டு காலப் பகுதியில் உருவாக்கப்பட்ட - இக்குளிரூட்டும் நிலையம் மூலம் பல்வேறு நன்மைகளை மீனவர்கள் அனுபவித்து வந்தனர். இருப்பினும் கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக இந் நிலை பாதிக்கப் பட்டுள்ளது. எனவே மேற்கூறப்பட்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு - இராணுவத்தினர் இவ்விடத்திலிருந்து அகலவேணடுமெனக் கோரும் இப்பிரதேச மக்கள் - இக்குளிரூட்டும் நிலையத்தினை மீண்டும் இயக்குவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

### வினை திறமைகாண் பரீட்சை முடிவு

வட-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் கலாசார உத்தியோகத்தருக்கு நடத்தப்பட்ட முதலாவது வினைத் திறமை காண் தரப்பரீட்சை முடிவுகள் பொதுச சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளன.

(72)

# புலிகளின் அலுவலகத்தில் நடந்த அம்பாறை அபிவிருத்திக் கருத்தரங்கு

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் - அக்கரைப்பற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும், மட்டு. - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மட்டு. - அம்பாறை நிர்வாகப் பொறுப்பாளர் றெஜினோல்ட், அம்பாறை அரசியல் பொறுப்பாளர் பாவா மற்றும் ஜனார்த்தனன், ஹென்றி, நிவராஜ் ஆகியோரோடு மற்றும் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடலின்போது அம்பாறை மாவட்டத்தில் கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி மற்றும் வீதிகள் புனரமைப்பு அபிவிருத்திகள் சம்பந்தமாக ஆராயப்பட்டது.

### நெல்லியடியில் நூலக வார நிகழ்வு

(வடமராட்சி)

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தினால் சர்வதேச நூலாக வார நிகழ்வு இன்று பி.ப. ஒரு மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (23)

# இராணுவ ஆட்சேர்ப்பு முயற்சிகள் வெற்றியைப் பெற்றுத்தரவில்லை

## என்கிறார் 11,000 ஊனமுற்ற படையினரின் சங்கத் தலைவர்

(கொழும்பு)

இராணுவத்தின் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை என்றும் இது தோல்வியிலேயே முடிவடைந்திருப்பதாகவும் போரில் காயப்பட்ட படைவீரர்கள் சங்கத்தின் தலைவர் அசோக தயாரத்ன தெரிவித்துள்ளளார்.

அரசாங்கம் படையினருக்குப் போதிய வசதிகளைச் செய்து கொடுபதற்குத் தயக்கம் காட்டி வருவதாலேயே படையில் சேர இளைஞர்கள் பின்னடித்து வருகின்றனர். முக்கியமாக காயமுற்ற, ஊனமுற்ற படையினரின் நலன்களை அரசாங்கம் கவனிப்பதில் அக்கறையற்றிருக்கின்றது.

வெளி நாடுகளில் ஊனமுற்ற, காயமுற்ற படையினருக்கே அதிக வசதி, வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படுகின்றன. ஆனால் இலங்கையில் காயமுற்ற, ஊனமுற்ற படையினர் எந்தக் கவனிப்பும் இன்றி அரசாங்கத்தினால் கைவிடப்பட்டுவிடுகின்றனர்.

எமது சங்கத்தில் மட்டுமே 11 ஆயிரம் ஊனமுற்ற படைவீரர்கள் உள்ளனர். இவர்களுக்கான வசதி, வாய்ப்புக்களை அரசாங்கம் உறுதிப்படுத்தும் வரை படைக்கு ஆட்சேர்க்கும் முயற்சிகள் வெற்றி பெறுவது கடினம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய இராணுவம் நச்சுவாயுப் பிரயோகம்; பணய நாடகத்தின் திடுக்கிடும் தகவல்!

★ பணயக் கைதிகள் அனைவரும் அரங்குள் மயங்கினர்!
★ இதயவலி, மாரடைப்பால் பலர் உடனே பலி!!
★ தொடர்ந்து தாக்கியபடி இராணுவம் உள்நுழைந்தது!
★ சண்டையின் இடையில் 100 பணயக்கைதிகள் பலி!!

✼ பிந்திக் கிடைத்த தகவல்களின்படி பெண் தற்கொலையாளிகள் செச்சினியர்கள் அல்ல என்றும் மத்திய கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. ✼

மொஸ்க்கோ நாடக அரங்கு மீது, ரஷ்ய இராணுவம் இனம்புரியாத, நச்சுத்தன்மையான, மயக்கும் இயல்புள்ள வாயு ஒன்றை முதலில் பயன்படுத்திய பின்பே தாக்குதலை ஆரம்பித்தது என்று தகவல் வெளியாகியுள்ளது.



கடுமையான நச்சுவாயுத் தாக்கத்திற்கு உட்பட்டு குப்புற வீழ்ந்து கிடக்கும் பணயக் கைதி ஒருவரை மீட்டு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்ல முயற்சிக்கப்படுகிறது.

ஹலுசினோஜெனிக் வாயு (Hallucinogenic) பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என இராணுவ நிபுணர்கள் சந்தேகிக்கின்றனர். இவ்வாறான பணயக் கைதிகள் விவகாரத்தில் இது முன்னர் ஒரு போதும் பயன்படுத்தப்படவில்லை.

அரங்குக்குள் பணயக் கைதிகளைச் சுற்றி வளைத்திருந்த தற்கொலைப் போராளிகளை இலக்கு வைத்துப் பிரயோகிக்கப்பட்ட இந்த வாயு அப்பாவிக் கைதிகளையே அதிகளவு முதலில் பாதித்தது என்றும், வாயுவால் மூச்சுத்திணறலுக்கு உட்பட்ட கைதிகளில் பலர் அரங்கிற்குள் மயங்கினர் என்றும் - இன்னும் பலர் மாரடைப்பால் பலியாகினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

தற்கொலையாளிகளே தம்மீது மயக்கும் வாயுவைப் பிரயோகிப்பதாக எண்ணிய பணயக் கைதிகளில் சிலர், தற்கொலையாளிகள் மீது ஆத்திரமடைந்து தாக்க முற்பட்ட வேளையில் தற்கொலையாளிகள் பணயக் கைதிகளைச் சுட்டுக் கொல்லத் தொடங்கினர் என்றும் மொஸ்க்கோவிலிருந்து சர்வதேச செய்தியாளர்கள் தகவல் வெளியிட்டனர். பணயக் கைதிகள் சுட்டுக் கொல்லப்படுவதைச் சாட்டாக வைத்து, ரஷ்ய இராணுவத்தின் விசேட கொமாண்டோக்கள் அரங்குக்குள் பாய்ந்துள்ளனர்.

எனினும், எதிர்பார்த்தது போல இலகுவாக மீட்பு நடவடிக்கை அமையவில்லை. தற்கொலையாளிகளுக்கும் ரஷ்ய இராணுவத்துக்குமிடையில் திடீரென வெடித்த சண்டைக்குள் ஏற்கனவே வாயுவால் பாதிக்கப்பட்ட நிலையில் வெளியே



நச்சுவாயுத் தாக்கத்திற்கு உள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை பார்வையிட வருகின்ற உறவினர்கள் ரஷ்யப் படையினரால் தடுத்து நிறுத்தப்படுகின்றனர்.

நகர்ந்து ஓடமுடியாத நிலையில் காணப்பட்ட பணயக் கைதிகள் அகப்பட்டனர். ஒரு மணித்தியாலம் வரை நீடித்த இச்சண்டையில் நூறு பேர் வரையான பணயக் கைதிகள் அரங்குக்குள்ளேயே கொல்லப்பட்டனர். பலருக்கு கடுமையான காயங்கள் ஏற்பட்டன.

நச்சு வாயுவொன்றை அரங்கின் மீது பிரயோகித்தமை தொடர்பான விபரங்களை பூரணமாக வெளியிட வேண்டும் என்ற அழுத்தம் ரஷ்ய அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டு வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட அனைவரிடமும் ரஷ்ய ஜனாதிபதி மன்னிப்புக் கோரிய பிறகு, ஒவ்வொருவருக்கும் எல்லாவிடயங்களையும் கூறவேண்டிய அவசியமில்லையென ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதில் மருத்துவர்கள் தீவிர சிரமங்களை அனுபவிக்கின்றனர். நச்சு வாயுத் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் உயிராபத்தை எதிர்நோக்குகின்றனர்.

## பணயக் கைதிகள் கொல்லப்பட்டமைக்கு மன்னிப்புக் கோரினார் விளாடிமிர் புட்டின்



(மொஸ்கோ)

செச்சினியத் தற்கொலைப் போராளிகளின் பணய நாடகத்தை இராணுவ நடவடிக்கை மூலம் முடிவுக்குக் கொண்டு வந்தபோது கைதிகளாக திரையரங்குக்குள் இருந்த மக்களில் பலர் கொல்லப்பட்டமைக்கு ரஷ்ய ஜனாதிபதி மன்னிப்புக் கேட்டுள்ளார்.

நேற்று தொலைக்காட்சி மூலமாக - பணய நாடகம் முடிவுக்கு வந்துள்ளமை தொடர்பாக - விரிவான உரையொன்றை அவர் நிகழ்த்தினார்.

"இராணுவ நடவடிக்கைக்குப் பதிலான வேறு மாற்று வழிமுறைகள் எதுவும் தமக்கு இருக்கவில்லை" என்றும் - புட்டின் தெரிவித்தார். இராணுவ நடவடிக்கையை தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாமற் போய்விட்டது. அதனால் ஏற்பட்ட உயிர் இழப்புக்களுக்காக உயிரிழந்தவர்களின் உறவுகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று ரஷ்ய ஜனாதிபதி சோகம் தொனிக்கும் குரலில் தெரிவித்தார்.

வெளிநாட்டு பயங்கரவாதிகளுக்கும் மொஸ்கோ அரங்கின் பணய நாடகத்திற்கும் தொடர்பிருப்பதாகத் தெரிவித்த புட்டின், அல்கெய்டா பயங்கரவாதத்தின் தொடர்பு இவ்விவகாரத்தில் உள்ளதெனவும் சுட்டிக்காட்டினார்.

உலகின் முக்கிய நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து உலகப்பயங்கரவாதத்தை ஒழிப்பதில ரஷ்யா உழைக்கும் என்றும் அவர் உறுதி உரைத்தார்.



பணயக் கைதிகளுடன் தற்கொலையாளிகளும், மருத்துவமனைகளுக்குள் ஊடுருவியிருக்கலாம் எனச் சந்தேகிக்கின்ற ரஷ்யப் படையினர், எவரையும் மருத்துவமனைகளில் இருந்து வெளியேற அனுமதிக்கவில்லை; கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

## கர்நாடக அரசு மன்னிப்புக்கோரும்!

(பெங்களூர்)

காவிரிப் பிரச்சினையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறியதற்கு மன்னிப்பு கோருவதற்கு கர்நாடக அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தை கர்நாடக அரசு அவமதிப்பதாக தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், காவிரிப் பிரச்சினையில் உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை அமுல்படுத்த முடியாவிட்டால் கர்நாடக அரசு பதவி விலகட்டும் எனக் கூறியுள்ளது.

இதையடுத்தே கர்நாடக அரசு தீர்ப்பை அமுல் செய்யத் தவறியதற்கு உயர் நீதிமன்றத்திடம் மன்னிப்புக் கோரத் தீர்மானித்துள்ளது.

## பலஸ்தீனத்தின் யூதக்குடியிருப்பில் குண்டுவெடிப்பு!

(ஜெருசலேம்)

பலஸ்தீனத்தின் மேற்குக் கரையிலுள்ள பெரிய யூதக் குடியிருப்பு ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகவும் - இன்னும் பலர் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பூட்டோ, நவாஸ் மீண்டும் ஆட்சியில் அமர முடியாது!

### பெர்வேஷ் முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்கள் பெனாசிர் மற்றும் நவாஷ் ஆகியோர் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாதென பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் தெரிவித்துள்ளார்.

குவைத்திலிருந்து வெளியாகும் அரபு நாளேட்டுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.


நாட்டைக் கொள்ளையடித்த அரசியல்வாதிகளை அண்மையில் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் நிராகரித்துள்ளனர். இதனால் பெனாசிர் பூட்டோவும், நவாஷ்ஷெரிவும் மீண்டும் ஆட்சிக்கு வருவோம் என்று எதிர்பார்க்க முடியாது என்றும் முஷாரப் தெரிவித்தார்.




ஈராக்குக்கெதிரான அமெரிக்கா தலைமையிலான போரை எதிர்த்து - வொஷிங்டன், சன் பிரான்சிஸ்கோ ஆகிய அமெரிக்க நகரங்களில் பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்கள் எதிர்ப்புப் பேரணி நடத்தினர். அமெரிக்க-வியட்னாம் போரை எதிர்த்து அன்று அமெரிக்கர்கள் நடத்திய எதிர்ப்பியக்கத்தை இந்தப் பேரணி ஞாபகப்படுத்தியதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.





# இலக்கியச் சோலை

## A-9 என நீளும் நினைவுகள்

**பகுதி மூன்று**



நீண்டு கிடந்த தெருவின் அரைப்பங்கு
நீருமின்றி வெடித்துச் சிதறிட
தாண்டிக் குளத்தினைத் தாண்டியே A-9
தளதளென்று செழிக்கத் தொடங்கிற்று
வேண்டும் போது திறக்கவும், மூடவும்
"விலைகள் பேசவும்" வியாபாரஞ் செய்யவும்,
ஓமந்தைப் பாலம்.......உதவத் தமிழினம்
ஓடி ஓடியே ஓடாகித் தேய்ந்தது.

ஓமந்தைக்கிப்பால் மின்சாரமுஞ் செத்து
உதவவோ, உடன் ஓடிவந்தருளவோ
யாரும் அற்று, மருந்தை மறந்தோய்ந்து,
யெளவனம் பட்டு வன்னி வரண்டது.
பாதைமாறிப் பயணங்கள், பாஸ்முறை,
பகலிரவாய்த் தவமிருந்தேகுதல்
போர் வெடிக்கையில் புகுந்து அதனூடு
பொருட்கள் கொண்டு புண்பட்டுப் போகுதல்

காத்துக் கிடந்து கணைபட்டு வீழுதல்,
கைப் பணம் விட்டு உயிர்காத்து மீளுதல்,
காற்று மாரி, கடுவெயில் வேளையும்
களைத்தலைந்திடல், என்று ஓமந்தையில்
நேற்றும் A-9 நிம்மதி கொன்றது!
நிதமும் 'வானத்தரக்கர்' களைகளால்
ஏற்பு ஆக்கி வலியில் துடித்தது!
இரணத்தை மாற்றவே ஏலாதிருந்தது.

- ஜெயங்கொண்டான்

## சுரை பொழுது

சலிப்பூட்டும் படியாய்
இலைகள் உதிரும் ஒவ்வொன்றாய்
வெப்பக் காற்று/மேனி தடவிப் போகும் மதியத்தில்
கிளர்வுறும் துக்கத்தூடே
கண் தழுவுகிறது தூக்கம்
காணுகை நிகழாது
எரியுண்டு போகும் கணங்களின் நீட்சி
வெறுமையை விதைத்துப் போகும் மனதில்
காதலில் (மட்டும்) அல்ல
எந்தவோர் எதிர்பார்ப்பின் முடிவிலும்
இப்படியோர் விசனம்
உங்களுக்கும் ஏற்பட்டதா?
தாடிவளர்த்து நோய்ந்து போன
ஒரு இளைஞனின் குதூகலத்தை தின்ற பொழுதுகள்
ஏன் எனக்கும் நேர்கின்றன?
காதலில் அல்ல
எந்தவோர் எதிர்பார்ப்பின் பக்கங்களிலும்

- ஞாபகன் -

## உள்வெளி

சென்ற 19,20,21,22 ஆகிய நான்கு நாள்களில், யாழ்.'வீரசிங்கம் மண்டபத்'தில் சிறப்பாக நடைபெற்று முடிந்த 'மானுடத்தின் தமிழ்க்கூடல்-2002' என்ற நிகழ்வு, பல தளங்களில் முக்கியத்துவம் பெறுவதொன்று.

நீண்டகாலத்தின் பின்னர் சிங்களக் கலைஞர், ஊடகவியலாளர் பலர் ஒரு சேர இதிற் கலந்துகொண்டனர். தமிழ்மக்களின் கலாசாரத்துறைசார் செயற்பாடுகள், இன ஒடுக்குமுறை - விடுதலைப் போராட்டம் தொடர்பான உணர்வு நிலைகள் போன்றவற்றை அவர்கள் அறிந்துகொள்ள முடிந்தது; அது போலவே, இப்போராட்டச் சூழல் பற்றிய சிங்களத்தரப்பின் கருத்துக்களை அவர்கள் மூலம் தமிழ் மக்கள் அறியவும் வாய்ப்பேற்பட்டது. சிங்கள- தமிழ்ப் படைப்புக்களின் மொழிபெயர்ப்புச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள 'மடுளுகிரிய விஜேரத்ன', ஊடகவியலாளரான 'ரோகித பாஷண அபேவர்த்தன', 'மஞ்சுள வெடிவர்த்தன', திரைப்பட நெறியாளரும் பல்கலைக்கழகப் பேராசிரியருமான 'சுனில் ஆரியரத்ன' போன்றோர் அவர்களிற் சிலராவர்.

மடுளுகிரிய விஜேரத்ன தமிழில் ஆற்றிய உரையில், "1956 இல் இயற்றப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் தமிழ் மக்களிற்கு வெறுப்பை ஏற்படுத்தியது; அச்சட்டத்தினால் இரு இனங்களின் மத்தியில் இடைவெளி ஏற்பட்டது. தமிழ்-சிங்கள மொழி இலக்கியங்கள் பரஸ்பரம் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இவ்வாறான மொழிபெயர்ப்பு இலக்கியங்களைப் படிப்பதால் இரு இன மக்களிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்படுமென நம்புகிறேன். நூற்றுக்குக் குறையாத தமிழ்க்கதைகள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. புத்தக வடிவத்தில் பத்துக்குக் குறையாமல் வந்துள்ளன. 'ராவய' பத்திரிகையில் வாரந்தோறும் தமிழ்ச் சிறுகதைகள் வெளியாகின. 'கவிதை' சஞ்சிகையிலிருந்து 24 கவிதைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்தேன். 'டொமினிக் ஜீவா', 'சாந்தன்', 'செங்கை ஆழியான்', 'சுதாராஜ்' ஆகியோரின் நூல்கள் சிங்களத்தில் வெளிவந்துள்ளன. 'கம்பெரலிய', 'விராகய' ஆகிய நாவல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு நன்றாக செய்யப்படவில்லை" எனத் தெரிவித்தார்.

மஞ்சுள வெடிவர்த்தன (இவர் ஒரு கவிஞருமாவார்) பேசுகையில், "சிங்கள இராணுவத்தால் வடக்கு ஆக்கிரமிக்கப்பட்டது பற்றி சிங்களப் பத்திரிகைகள் எப்படித் தெரிவித்தன என்பதைப் பார்க்க வேண்டும். ஊடகங்களில் பெரும்பாலானவை ஐ.தே.க, ஜே.வி.பி, பொ.ஐ.மு. ஆகியவற்றுடன் தொடர்புடையவை; தேசிய இனப்பிரச்சினை பற்றிய இக்கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு ஏற்பவே இந்த ஊடகங்களும் முடிவு எடுக்கின்றன. அண்மையில் ஒரு சிங்களப் பத்திரிகை, 'ஜே.வி.பியை அழிக்க நூறு புலிகள் கொழும்பு வருகை' எனத் தலைப்புச் செய்தி வெளியிட்டது. தலைப்புச் செய்திகள், தலையங்கங்கள் என்பன தமது தாயகத்தில்-தமது மக்களின் விடுதலைக்குப் போராடும் புலி இயக்கத்திற்கு மட்டும் அல்ல, சாதாரண தமிழ் மக்களிற்கும் எதிரானவையாகவே உள்ளன" என்றார்.

சுனில் ஆரியரத்ன உரையாற்றுகையில், "இலங்கையில் தமிழ்த் திரைப்படத் துறை வளர்ச்சி அடைவதற்கு அரசாங்கங்கள் மட்டுமல்ல தமிழ்த் திரைப்பட வியாபாரிகளும் தடையாக உள்ளனர்" எனத் தெரிவித்தபோது, பழைய சம்பவம் ஒன்று என் நினைவுக்கு வந்தது. எழுபதுகளின் மத்தியில் 'பொன்மணி' என்ற சிறந்த இலங்கைத் திரைப்படம் ("இது முன்னோடியான ஒரு திரைப்படம்; கலைத்தரமான தமிழ் சினிமாவின் வளர்ச்சி இதிலிருந்துதான் எதிர்காலத்தில் ஆரம்பமாகும்" என்று கூறுவார் 'றெஜி சிறிவர்த்தன'.) யாழ்ப்பாணத் திரையரங்கொன்றில் திரையிடப்பட்டபோது, மக்கள் விருப்புடன் பார்த்தனர். நிறைய மக்கள் ஆதரவு இருந்தபோதிலும், ஒரு கிழமைக்கு மேலாக அத்திரைப்படம் காட்டப்படவில்லை! இலங்கை முழுவதிலும் திரைப்பட விநியோகத்துறையையும் பெரும்பான்மையான திரையரங்குகளையும் மிக நீண்ட காலமாகத் தமது 'ஏக போகமாக' வைத்திருந்த இரண்டு தமிழ் நிறுவனங்களும், முஸ்லீம் ஒருவருக்குச் சொந்தமான நிறுவனமும், தேசியத் தமிழ்த் திரைப்படத் தயாரிப்பு முயற்சிகள் தொடர்பாக விரோதப்போக்கையே கடைப்பிடித்து வந்தன; ஆனால் மறுவழமாக, சிங்களப் படத்தயாரிப்புக்களில் ஈடுபட்டுழைத்தன! அந்த நிறுவன 'முதலாளி'களின் அக்கறையெல்லாம், 'போதைப் பொருள் யாவாரம் போல்' இலாபத்தை அள்ளி அள்ளிக் குவித்துத்தந்த தென்னிந்தியத் 'தமிழ் மசாலாப்படங்கள்' மீதே பதிந்திருந்தது; இன்றுள்ள சோகக்கதையும் துரோகக்கதையும் கூட அதுவே தான்!

தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக, 'காமினி பொன்சேகா' வின் 'கொட்டி வலிகய', 'நொமியென மினிஸ்ஸு'; 'ஷெல்ரன் பயாகல'வின் 'கொலு முஹுதே குணாட்டுவ'; 'சந்திரன் ரட்ணத்'தின் 'ஆதர கதாவ'; 'சோமரத்ன திசாநாயக்க'வின் 'சறோஜா', 'புஞ்சி சுரங்கனாவி'; 'அசோகா ஹந்தகம' வின், 'மே மகே ஹந்த'; தனது 'சறுங்கலே' முதலிய சுமார் பத்துப் படங்கள் சிங்களத்தில் வந்துள்ளதாகத் தெரிவித்த ஆரியரத்ன, எழுபதுகளின் நடுப்பகுதியில் 'சறுங்கலே' வெளிவந்த வேளை "சிங்களவர்களிற்கு விரோதமான படம்" என்று குற்றஞ்சாட்டப்பட்டதையும் நினைவுகூர்ந்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுதுவினைஞனான 'நடராஜா' தான் விரும்பிய - தன்னை நேசித்த-சிங்களப் பெண்ணை மணம்புரிய முடியவில்லை; அந்தப் பெண்ணின் தாயின் இன உணர்வுதான் காரணம். தனது தங்கை தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த வேதக்கார இளைஞனைக் காதலிப்பதையும் நடராஜா எதிர்க்கிறான்; அதனால் கிணற்றில் குதித்து அவள் தற்கொலை செய்கிறாள். கொழும்பிற்கு வந்து வேலை பார்த்தபடி விரக்தியிலும் தனிமையிலும் நடராஜா, பக்கத்தில் கசிப்பு விற்கும் சைமன்-மனைவி-மகளான சிறுமி ஆகியோருடன் பரிவாகப் பழகுகிறான். சிறுமிக்கு அவன் கொடுக்கும் காற்றாடி (சறுங்கலே), அச்சிறுமியின் ஆசைகளின் குறியீடாகவும் அவனுடையதும் தங்கையினதும் காதலின் குறியீடாகவும் இருக்கிறது. அது நீண்டு... நீண்டு... தொலைவில் செல்கிறது; ஒரு சமயம் கிழிந்தும் விடுகின்றது! 1958ஆம் ஆண்டின் தமிழ் இனப்படுகொலைச் சூழலில் அவன் கொல்லப்படுகிறான்.

படத்தின் மூலக்கதையினை எழுதிய 'காமினி பொன்சேகா' தான் நடராஜா பாத்திரத்தில் நடித்துள்ளார்; சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழி உரையாடல்கள் படத்தில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் மிக முக்கிய கலை- இலக்கிய விமர்சகரான றெஜி சிறிவர்த்தன இத்திரைப்படம் பற்றி எழுதிய கட்டுரையொன்று, 'லங்கா காடியன்' ஆங்கில இதழில் (1.5.1979) வெளிவந்துள்ளது. வாசகரின் நன்மை கருதி அதிலுள்ள கருத்துக்கள் சிலவற்றைத் தருகிறேன்.

"இந்தத் திரைப்படம் 'பாரபட்சமானது' என்பதுதான், சறுங்கலே பற்றிய கண்டனங்களிலே வருத்தந்தருவது. சிங்கள இனவாதிகளைக் காட்டும் படம், தமிழ் இனவாதிகளைச் சித்திரிக்கவில்லையாம்; மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த அறிவாளிகளிற் சிலர் கூட இவ்வாறு கூறுகிறார்கள்.

...ஆனால் வேறொரு முக்கியமான விடயத்தையும் நான் சுட்டிக்காட்ட வேண்டும். 'பாரபட்சம்' என்ற குற்றச்சாட்டில் மறைவாக இருப்பதும் அடிமனதில் இருப்பதும், அடிபட்ட வலியினால் அனுங்கும் இனவாதத்தின் குரல்தான். இந்த உணர்வு எந்தளவிற்கு ஆழமாக உட்பரந்து இருக்கின்றது என்பதனையும், மத்திய தர வர்க்க அறிவுஜீவிகளும் இதனில்நின்று விடுபடவில்லையென்பதையும் கவனியுங்கள். தனது தங்கைக்கும் அவளது காதலனுக்கும் நடராஜா கொடுமைகள் செய்கிறான். கொழும்புநகரில் அவனைப் பாதிக்கும் இனவெறி வன்முறைக்கு- எதிரிடையாக இதனைப் படம் விபரிக்கிறது. இதன் மூலமாக இப்படம் வெளிக்காட்டும் பக்கச் சார்பற்ற தன்மையைக் கவனிக்க விரும்பாதவர்களை எப்படிப் புரிந்து கொள்வது?"

அதே இதழில், சிங்கள ஆய்வறிவாளரான 'ஜே. உயங்கொட' வின் கட்டுரையும் காணப்படுகிறது. இதோ,அவரது கருத்துக்கள் சில:

"இழிவான அரசியல்தான் இனவாதத்தின் அடிப்படை என நடராஜா நினைக்கிறான். எந்த இனத்து மனிதர்களும் இயல்பில் நல்லவர்கள்; அவர்களை அரசியலே கெடுக்கின்றது என்பது நடராஜாவின் நம்பிக்கை.

...ஆனால் இதுதான் மூலகாரணமல்ல. தேசிய இன அடக்கு முறை என்பதனால் அதாவது அத்தகைய அரசியல் மூலம் தான் இனவாதத்தை விளங்கிக் கொள்ளலாம். இந்த ஆதார உண்மையை சுனிலும், காமினி பொன்சேகாவும் விளங்கத் தவறிவிட்டனர்.

...நடராஜாவின் பிரதான முரண்பாடாக அவனது 'இரண்டக நிலை' (இனஒற்றுமையைப் பேசுகின்ற அதே வேளை சாதி வெறியனாக இருத்தல்) சித்திரிக்கப்படுகிறது. ஆனால், தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராக அவனில் தோன்றும் உணர்வுகளையே முதன்மைப்படுத்திக் காட்டியிருக்க வேண்டும்; ஆனால் எதிரிடையாக சாதிப்பிரச்சினைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவம், தேசிய இனப்பிரச்சினையை மழுங்கடித்து விட்டது!"

- சூரி

# "உறங்காத உண்மைகள்"

## காலை ஒன்பது முதல் மாலை ஐந்து வரையான போர்

**ஜான் பாறி**
**வானொலி தொழில்நுட்பவியலாளர்**
**யூ.எஸ்.இராணுவ விமானப்படை**
**என்ஹா றாங்**
**டிசெம்பர் 1962 ஒக்டோபர் 1963**

நாறாங்கிலுள்ள (Nha Trank) எனது முகாமிற்கு கிறிஸ்மஸ்ஸிற்கு முந்திய மாலையில் வந்து சேர்ந்தேன். சைகோனிலுள்ள ஒரு சிறிய மாற்றீடு செய்யும் முகாமில் விமானப்பய ணத்திற்காக நான்கு தினங்கள் காத்திருந்தேன். அந்த முகாமில் 'பாம்' மரங்களும் கூடாரங்களும் தூசிகளும் நிறைந்திருந்தன. ஒரு சிறிய விமானத்தில் ஏறும்படி பணிக்கப்பட்டேன். அதில் ஒரு குழுத்தலைவரும் விமானியும், துணை விமானியும் இருந்தனர். மந்தககதியில் பறந்த அந்த விமானம் நானூறு மைலைக கடக்க நான்கு மணித்தியாலங்கள் எடுத்தது.

நாங்கள் தரையிறங்கிய போது மம்மலாகிவிட்டது. விமானம் நின்றவுடன் குழுத் தலைவரும் விமானியும், துணைவிமானியும் ஜீப் ஒன்றினுள் குதித்து அதை ஓட்டிச்சென்றனர். நான் எனது பயணப்பையுடன் தரையிறங்க முன்பே என்னைத் தனியேவிட்டு அவர்கள் சென்று விட்டனர். நான் எங்கிருக்கிறேனென்று எனக்குத் தெரியவில்லை. என்னுடன் ஒருவரும் இல்லை. இருட்டத் தொடங்கி விட்டது. மலைகளிலே விசித்திரமான ஒளிகள் தென்பட்டன. என்னிடம் ஆயுதம் எதுவும் இல்லை.

அது ஒரு பிரிவுத் தலைவியட்நாமியர் வீதிகளில் சுற்றித் திரிந்தனர். அவன் ஒவ்வொரு இடத்திற்கும் என்னைக் கூட்டிச் சென்றுவிட்டு மறைந்து விடுவான். அவனோ அல்லது வேறு யாரோ எனது மதுபானத்திற்கு பணம் கொடுத்தார்கள். மதுபானம் அருந்தி முடிந்தவுடன் நான் அங்கிருந்து வெளியேறுவேன். வியட்நாமிய மொழிச சொல் ஒன்றையும் என்னால் பேச முடியவில்லை, ஒருவருக்கும் அமெரிக்க மொழியும் தெரியவில்லை. முழு நேரமும் மற்றொரு அமெரிக்கனை நான் பார்க்கவேயில்லை; விமானத் தளம் எங்குள்ளதென்றும் எனக்குத் தெரியவில்லை. கடற்கரைக்குச் செல்லும் பக்க வீதிகளில் எது விமானத்தளத்திற்கு இட்டுச் செல்லும் என்பதைக் கண்டறிவதில் பாதி இரவைக் நான் கழித்து விட்டேன்.

பல்வேறு வீதிகளையும் முயன்று பார்த்து இறுதியாகச் சரியான வீதியைக் கண்டுபிடித்து, பிரதான படலை வரைக்கும் சைக்கிளை ஓட்டிச் சென்றேன். அடுத்த நாட்காலையில் நான் விழித்த பொழுது அனைவரும் அங்கிருந்தனர். அது கிறிஸ்மஸ் தினமாகும். ஒவ்வொருவரும் குடித்திருந்தனர். அதுதான் போருக்கு எனது அறிமுகம்.

பலமாதங்களின் பின்பு நாங்கள் ஒரு நாட்காலை மூன்று மணிக்கு நான் படுக்கையிலிருந்து தூக்கி வீசப்பட்டேன். இது எதனால் ஏற்பட்டதென்பது எங்களுக்குத் தெரியவில்லை. அத்துடன் யாரோ ஒரு முட்டாள் மின் விளக்கைப் போட்டது போல இந்த முதிய சார்ஜண்ட்டும் "மோட்டார்" எனக் கிறீச்சிட்டான். என்ன உணர்வு, ஏதோ குலுக்கல் மின் விளக்குகளை ஒளிரச் செய்தது, நாங்கள் முழுப்பேரும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் யாரோ முகாம் மீது மோட்டார் தாக்குதலில் ஈடுபட்டான்.

அது மோட்டார்களாக இல்லை. ஆனால் அகழிகள் வெட்டுபவர்கள் (Sappers) வேலியூடாக வந்து சில விமானங்களை வெடிக்கவைத்து விட்டு நழுவிச்சென்று விட்டார்கள். ஆனால் மோசமான நிலை என்னவென்றால் இராணுவம் எங்களை நம்பி ஆயுதங்களைத் தரவில்லை. எனக்கு முன்பு அங்கு தங்கவைக்கப்பட்டிருந்தவர்கள், துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறார்கள். அவர்கள் குடிவெறியில் தங்களுடைய ஆயுதங்களை எடுத்து விரைவாகச் சுடும் போட்டி நடத்துவார்கள். ஆகவே இரவு வேளையில் எங்களுடைய சகல ஆயுதங்களும் ஒரு அறையில் வைத்துப் பூட்டப்படும், அதற்குரிய திறப்பு ஆயுதக் காவலனிடம் மட்டும் இருக்கும். இந்தத் தாக்குதல் நடந்த இரவு ஆயுதக் காவலன் தன்னுடைய பெண் சிநேகிதியுடன் நகருக்குச் சென்றுவிட்டான். "ஆயுதக் காவலன் எங்கே? சாவி எங்கே? " என்று கூறியபடி எல்லோரும் இங்கு மங்கும் ஓடினர். அவனையோ, சாவியையோ எவராலும் கண்டு பிடிக்கமுடியவில்லை. விமான ஓடு பாதை வழியே இந்தப் பயங்கரமான துப்பாக்கிச் சூடு நடந்து கொண்டிருந்தது.

எங்களுடைய பகுதிக்கு ஒரு மையகமாகும். ஆனால் எல்லைக் கோட்டின் ஓரத்தில் நிற்கிறேனா என்பது எனக்குத் தெரியவில்லை. எதையும் என்னால் பார்க்க முடியவில்லை. எந்த இடம் என்பதே தெரியாத ஓர் இடத்திலே என்னை விட்டு விட்டார்களா? எதுவுமே எனக்குப் புரியவில்லை. கெரில்லாக்கள் வந்து என்னைப் பிடித்துச் செல்லப் போகிறார்கள்.

நின்று, நின்று நான் யோசித்துக் கொண்டிருக்கும் போது, கடைசியாக ஒரு ஜீப் வந்தது. குடிவெறியில் இருந்த ஒருவன் "ஓ! மன்னிக்கவும். உன்னை நான் முன்பே கூட்டிச் செல்லவில்லை" என்று கூறினான். ஒரு படைப்பிரிவுப் பகுதிக்கு அவன் என்னை அழைத்துச் சென்றான். அங்கு யாருமே இல்லை. அவன் மட்டுமே இருந்தான். அவன் தான் விடுதித் தலைவனும், வாகனமோட்டியும். நான் அறிந்த அளவில் அவன்தான் விமானத் தளம் முழுவதுக்கும் காவலாளி. வேறு எவரையும் நான் ஒரு பொழுதும் காணவேயில்லை.



"மற்றெல்லாரும் நகரத்தில் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறினான். நான் உனக்கு சாதாரண உடைகள் எடுத்து வருகிறேனென்று புறப்பட்டுப் போய் எடுத்து வந்தான். "இந்தச் சைக்கிள்களை எடுத்துக் கொண்டு போவோம்" என்றான். நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம், அங்கு பலமான காற்று வீசியது. வேறெந்த அமெரிக்கனையும் காணவில்லை; கடற்கரை மதுபானச்சாலைகளுக்கு உள்ளேயும் வெளியேயுமாக


கள் தான் போர் என்பதை உணரத் தொடங்கினேன். நாங்கள் வெளியேபோய் எங்களைச் சூழவுள்ளவர்களை விரட்டவிரும்பி அவர்கள் மீது சுட்டு, அவர்களையும் எங்கள் மீது திருப்பிச் சுடச்செய்தால், நாங்கள் ஒரு போர் நிகழச் செய்கிறோம். அதை நாங்கள் செய்யா விட்டால், அவர்கள் எங்களை நிம்மதியாக இருக்கவிடுவார்கள். சிறிது நேரத்தின் பின் இங்கொரு ஒழுங்கமைப்பு இருக்கிறதென்பது தெளிவாகியது. விசேட படையினர் உட்பட எங்களுடைய ஆட்கள், நான்கு முப்பதிற்கு வழமையாகப் போரை நிறுத்தி, மகிழ்ச்சியான வேளையில் குடிப்பார்கள். நான்கு முப்பதிற்குப் பின் போரே இல்லை. சனிக்கிழமைகளில் போரில்லை, ஞாயிற்றுக்கிழமைகளில், விடுமுறை நாட்களில் போரேயில்லை. அதுதான் சரி. காலை ஒன்பது முதல் மாலை ஐந்து வரை போர்.

அதிகாலையில் விமானம் வெளியே செல்லும், கண்காணிப்புப்படைகள் வெளியே செல்லும். ஒருவரும் போகாவிட்டால் ஒருவரும் இராணுவ நிலைகளைத் தாக்குவதில்லை. ஆனால் நாங்கள் முன்னேறிச் செல்லும் பொழுது, அவர்கள் நாறாங் போன்ற இடங்கள் உள்ளிட்ட எந்த இடத்தையும் அவர்கள் தாக்குவார்கள்.

காவலன் உண்டு. வியட்நாமிய காவல் படைகள் ஏதோ ஒரு இடத்தில் வெளிவந்திருக்க வேண்டும். பின்பு தங்கள் மீது குற்றம் சாட்டப்படக்கூடாது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, எதுவுமில்லாத இடத்தில் அவர்கள் வெறிபிடித்தவர்கள் போல சுட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால், அதை நாங்கள் அறியவில்லை. நாம் அறிந்த அளவிற்கு, வட வியட்நாமிய இராணுவம் முழுவதையும் விமான ஓடுதளத்திற்கு குறுக்காக ஹோசிமின் வழி நடத்திக் கொண்டிருக்கக்கூடும் என்பதே எனது எண்ணம்.

ஒரு ஆயுதமும் இல்லாமல், அடுத்து என்ன செய்வதென்ற சாடையான எண்ணம் கூட இல்லாமல் எல்லோரும் அங்குமிங்கும் ஓடினர். "எங்களுடைய காவலாளி விமானப் பறப்புப் பாதையில் தானாகவே நின்று கொண்டிருக்கிறான். அவனை அழைத்து வர யாராவது போக வேண்டும்" இந்த விசித்திர உணர்வு எனக்கு இருந்ததாக ஞாபகம். ஆகவே நான் ஒரு ஜீப்பில் ஏறி வெளிச்சத்தை அணைத்துவிட்டு விமானத் தளத்திற்கு செலுத்தத் தொடங்கினேன். நான் விளைவைக்கூட எண்ணிப்பார்க்கவேயில்லை. அதிர்ஷ்டவசமாக விமான பறப்புப்பாதையை நான் அடைந்த வேளையில் சகல துப்பாக்கிச் சூடுகளும் நின்றுவிட்டன.

நான் அங்கிருந்தபொழுது பத்தொன்பது வயதிலிருந்து இருபது வயதினனாகி விட்டேன். நான் 1962 மே யில் இராணுவத்தில் இணைந்து வானொலிப் பாடசாலைக் கல்வியை முடித்தவுடன் டிசம்பரில் வியட்நாமிலிருந்தேன். இதுதான் எனது முதல் நியமனமாகும். வகுப்பில் இருந்த எல்லோரையும் போல எனக்கும் ஜேர்மனிக்கு நியமனம் கிடைத்




*வியட்நாமில் நடந்த தாக்குதல்களில் நேரடியாகப் பங்குகொண்ட அமெரிக்கப் படையினரின் உண்மைகளை வெளிப் படுத்தும் மறுபக்கத்தை அனுபவத்திரட்டாகச் சொல்கிறது – அல் சந்தோலி எழுதிய 'நாம் வைத்திருந்த அனைத்தும்'* (EVERYTHING WE HAD). *இந்த அனுபவத்திரட்டிலிருந்து ஒரு அமெரிக்க விமானப்படை அதிகாரியின நாட் குறிப்பு இது.*

திருக்கும். எங்களில் இருவருக்கு வியட்நாமிற்கு உத்தரவு கிடைதத்து. நான் இராணுவத்தில் சேர்வதற்குமுன், ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு முன்பாக உயர்தரப் பாடசாலையிலிருந்து பட்டம் பெற்ற ஒருவனைச் சந்தித்தேன். அவன் அப்பொழுது தான் அலஸ்கா இராணுவத்திலிருந்து வெளிவந்திருந்தான். "ஆ! போக வேண்டிய இடம் வியட்நாமாகும். வெளிநாட்டில் வேலை செய்வதற்குரிய சம்பளத்துடன், சண்டைக்குரிய சம்பளத்தையும் நீங்கள் பெறுவீர்கள். உண்மையாகவே நீங்கள் நன்றாகத் தேடிக் கொள்ளலாம். உலகில் சில இடங்கள் உள்ளன. அங்கு நீங்கள் சண்டைக்காக சம்பளம் பெற முடியும் என்ற உள்ளுணர்வு இராணுவத்தில் உள்ளது. ஆனால செய்தித் தாள்களில் உண்மையான கலந்துரையாடல் இல்லை என்பதை என்னால் நினைவுகூர முடியும்.

இராணுவப் பிரிவிலுள்ள சிலர் தாங்கள் உலகில் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்ற எண்ணக்கருவே இல்லாமலிருக்கிறார்கள், அவர்களுக்கு அதில் அக்கறையே இல்லை. அது ரெனிஸ்ஸீ அல்ல. அது அவர்கள் வந்த இராட்சியமல்ல. ஆகவே அவர்களுக்கு எதைக் கற்பதிலும் ஆர்வமில்லை. வேறு சிலர் ஆர்வமுள்ளவர்களாக வியட்நாமிய மொழியைக் கற்று, பல வியட்நாமிய மக்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களாகவிருக்கின்றனர். ஏதோ ஒரு நிலையில் இராணுவ நிலைகளைச் சூழவுள்ள மக்கள் கெரில்லாக்களுடன் இணைந்து செயற்படுவதை நீங்கள் உணரத் தொடங்குவீர்கள். ஏனென்றால் அவர்கள் எங்களுடைய தளங்களினுள் ஊடுருவ முடிகின்றது. கெரில்லாக்கள் எங்குள்ளனர் என்ற சாடையான எண்ணம் கூட எங்களிடமில்லை.

டீம் (Diem) அரசாங்கத்திற்கெதிரான பௌத்த ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பமானபொழுது, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் தனது சொந்த மக்களுக்கெதிராக, நாடு முழுவதிலும் டாங்கிகளையும் (Tanks) இயந்திரத் துப்பாக்கிகளையும் (Mechine guns) முட்கம்பி வேலிகளையும் கட்டவிழ்த்துவிடும் பொலிஸ் அரசாங்கத்திற்கு நாங்கள் ஆதரவு வழங்குகின்றோம் என அநேகமாகக் கவனஞ் செலுத்தாத பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரிந்திருக்கும். 1963 மே யிலிருந்து கோடைகாலம் முழுவதும், மதுபானச்சாலைகளுக்கு சாதாரண மக்களின் உடைகளில் நடந்து செல்லும் பொழுது, இந்த ஆர்ப்பாட்டங்களினுள் அகப்பட்டுக் கொள்வோம்.

நான் கண்ட முதலாவது ஆர்ப்பாட்டம் நாறாங்கில் நடந்ததாகும். பிரதான வீதிகளின் ஒன்றினூடாக ஒரு மத்தியானம் எங்களில் பலர் நகருக்குச் சென்று கொண்டிருக்கும்போது திடீரெனச் சுலோக அட்டைகளுடன் அணிவகுத்து வரும் மக்கள் கூட்டத்தால் அவ்வீதி நிறைந்தது. அவ்வாறு செல்லும் கூட்டத்தை பார்த்தபோது அவர்களில் பலரை மதுபானச்சாலைப் பெண்கள் என அடையாளம் கண்டு கொண்டேன். அவர்கள் தளத்தின் உணவுச்சாலையில் வேலை செய்தபடியால் அடையாளங்காண முடிந்தது. நாங்கள் வாடகைக்கு அமர்த்திய பெண்கள் எங்களுடைய படுக்கைகளை ஒழுங்குபடுத்துவார்கள், எங்களுடைய சப்பாத்துக்

**தமிழில்**
**சிவசம்பு**

களை மினுக்குவார்கள். சொற்ப நேரத்தின் பின் இந்தியாவிலுள்ள பிரித்தானிய ஏகாதிபத்திய இராணுவமாக எங்களை நாம் மாற்றிக்கொண்டுவிட்டதாக நீங்கள் உணரத் தொடங்குவீகள். அங்கு நாம் இந்த வேலைக்காரர்கள் அனைவரையும் வைத்திருப்போம்.

எங்களுடைய வேலைக்காரர்களுக்கு நாங்கள் எல்லோரும் உரித்துடையவர்கள் என்பதை நாம் உணர்ந்துள்ளோம் என நான் கருதுகிறேன். ஒரு விடுதியிலுள்ள இருபது பொடியன்களும், ஒரு பெண் வந்து சகல துப்புரவு வேலைகளைச் செய்வதற்கும் படுக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கும், சப்பாத்துகளை மினுக்குவதற்கும் மாதத்திற்கு இருபது டொலர்களைக் கொடுப்பார்கள். அந்தப் பெண்ணுக்கு மாதத்திற்கு இருபது டொலர் பெருந்தொகைப் பணமாகும். இராணுவத்தில் நாங்கள் அதிகம் உழைப்பதில்லை. ஒரு மாதத்திற்கு ஐம்பது அல்லது அறுபது டொலர் தான்.

*(அடுத்த வாரம் தொடரும்)*

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*"சென்ற இடத்தால் செலவிடா தீதுஓரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிது"*

- திருக்குறள்.

# நமது நோக்கு

## கல்வியாளர்களின் கடமை

தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மையும், அதன் நியாயத்தன்மையும் பற்றிய திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் - தென்னிலங்கையில் இனமுரண்பாடுகளைத் தீவிரம் பெறச்செய்யும் முக்கிய காரணிகளுள் ஒன்றாக அமைந்தன.

தமிழர் போராட்டத்தை - முழு இலங்கையையுமே தமிழர்களுடைய ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வரும் போராட்டமாகவும், தமிழர்கள் கோரும் அடிப்படை உரிமைகளை - சிங்களவர்களுடைய உரிமைகளைப் பறிக்கும் சதியாகவும் - மாயைக்குள் சிங்கள மக்களைச் சிக்க வைப்பதில் பல சக்திகளும் பெரும் முயற்சிகளில் ஈடுபட்டன /இன்றும் ஈடுபட்டு வருகின்றன.

இத்தகைய பொய்ப் பிரசாரங்கள் தமிழர்கள் மீதான இன முரண்பாட்டையும், குரோதத்தையும் வளர்த்து விடுவதற்கான கருவிகளாகவும் பயன் படுத்தப்பட்டன.

இத்தகைய தமிழர் விரோதப் போக்கினை - சிங்கள மக்களிடையே கருவுறச் செய்வதில் சிங்களப் புத்திஜீவிகளுக்கும் பெரும் பங்குண்டு.

உண்மை தெரிந்தும், யதார்த்தம் புரிந்தும் - குறுகிய அரசியல் இலாபநோக்கோடும், திட்டமிட்ட இனவாத நோக்கோடும் சிங்களப் புத்திஜீவிகள் கடந்த காலங்களில் மேற்கொண்ட பிரசாரங்களை தமிழர்கள் மீதான வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப் பட்டவேளைகளில் தமிழினம் நேரடியாக அனுபவித் திருக்கிறது.

தவறான வரலாற்றுத் தகவல்களையும், அரசியல் திரிவுவாதங்களையும் - சிங்கள மாணவர்களிடம் எடுத்துச் சென்றதன் விளைவாகவும் -

தமிழர்கள் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் எழுந்தது என்பதையும், அப் போராட்டத்தின் நியாயத்தன்மையையும் சிங்கள மக்களிடம் திட்டமிட்டு மறைத்ததாலும் - தமிழர்கள் மீதான காழ்ப்புணர்வு அவர்களிடம் வளர்க்கப்பட்டதை பலரும் அறிவார்கள்.

இத்தகைய சூழலில், ஏலவே வேரூன்றியிருக்கும் இனவிரோத நச்சுக் கருத்துக்களை அகற்ற இனிமேலாவது - தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் பற்றித் தெளிவான, உறுதியான விளக்கத்தை எடுத்துச்சொல்ல முன்வர வேண்டியதன் அவசியம் - நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற, வடக்குத் தெற்கு கல்வியாளர்கள் பங்கேற்ற 'மீள் நல்லிணக்கத்திற்கும் சமாதானத்திற்குமான கல்வி' என்னும் தலைப்பிலான பயிற்சி முகாமில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இனங்களிடையேயான முரண்பாடுகளை, வளர்ந்து வரும் நாகரிக முன்னேற்றத்தில் அறிவியல் ரீதியாகச் சிந்தித்துத் தீர்க்க முன்வர வேண்டும் என அங்கு கூடியிருந்த கல்வியாளர்களுக்கு, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அழைப்பும் விடுத்தார்.

இந்த அழைப்பின் உள்ளடக்கமானது - நிரந்தர சமாதானத்துக்கான பலமான அத்திவாரமொன்று மக்களிடையேயிருந்தும் அமைக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

இந்த வகையில் இரு இனங்களுக்குமிடையிலான புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, பரஸ்பரம் மதித்துக் கொள்வதற்கான அடிப்படைக் கடமை என்பவற்றை கல்வியாளர்கள் இனிமேலாவது மேற்கொள்ளவேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளே அரசியல் ரீதியாக எட்டப்படும் எந்தவொரு தீர்வையும் மிகச் சுலபமாக நடைமுறைக்குள்ளாக்க உதவும். நீண்ட அமைதிக்கும், சக வாழ்வுக்கும் அதுவே ஆரம்பப்படியாகவும் அமையும்.

# தென்னிலங்கையின் அரசியல் குழப்பங்கள் இனப்பிரச்சினை தீர்வில் நுழையக்கூடாது

### அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு நிருபர்)

இலங்கைக்கு இப்போது அவசியமான தேவை இனப் பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வே. இதில் தென்னிலங்கையிலுள்ள அரசியல் பூசல்களுக்கும் குழப்பங்களுக்கும் இடமளிக்கக்கூடாது என கொழும்புக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உதவி ராஜாங்க அமைச்சர் டொனால்ட் காம்ப் தெரிவித்துள்ளார்.

அவரது இக்கருத்தை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பேச்சாளர் புரூஸ் நேற்று வெளியிட்டார்.

உதவி அமைச்சர் நேற்று தனது விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பை விட்டுப் புறப்பட்ட பின்னர் அவரது விஜயம் பற்றிய செய்திக்குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

இக்குறிப்பில்- தென்னிலங்கையின் அரசியல் பூசல்களுக்கு இடமளித்தால் அது நாட்டையே பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கி விடுமென்றும் உதவி அமைச்சர் டொனால்ட் காம்ப் கருத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கு — கிழக்குப் பகுதி புலிகளிடம் தாரை வார்ப்பு

### தினேஷ் குணவர்த்தன குற்றச்சாட்டு

(கொழும்பு நிருபர்)

இன்னமும் ஜனநாயக வழிக்கு வராத விடுதலைப் புலிகளுக்கு கூட்டுச் செயலணிக் குழுவில் அரசாங்கத்திற்குச் சமனாக இடமளிப்பதன்மூலம் வடக்கு, கிழக்கு அவர்களிடமே தாரை வார்க்கப்பட்டு விட்டதாக மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைப்பின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன பிரதமர் ரணிலைக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கும் புலிகள் அழைக்கப்பட்டிருப்பதாக கூறிய தினேஷ் குணவர்த்தன -

விடுதலைப்புலிகளுக்கு அளிக்கப்படும் இந்த முக்கியத்துவம் பற்றியும் அதனால் விளையப்போகும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் விளக்கமளிக்க விருப்பதாகவும் கூறியுள்ளார்.

ஒஸ்லோ மாநாட்டில் புலிகள் பங்குபற்றினால் அது அரசாங்கத்துக்கு இணையான அந்தஸ்தை புலிகளுக்கு வழங்குவதாகிவிடும் என்றும் தினேஷ் குணவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

## பேச்சுக்கள் பற்றிய விபரத்தை வெளியிட்டால் தேவையற்ற குழப்பங்கள் ஏற்படாது

### ஃபவரல் அமைப்புத் தலைவர் கூறுகிறார்

(கொழும்பு நிருபர்)

சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் அதேவேளை, அப் பேச்சுக்கள் பற்றிய தகவல்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதன் மூலம், தேவையற்ற தப்பபிப்பிராயங்கள் மக்களிடையே உருவாவதை தடுக்க முடியும் என 'ஃபவரல்' தேர்தல் கண்காணிப்புக் குழுவின் தலைவரான குணதிலக்க கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுக்கள் பற்றி தவறான கண்ணோட்டங்கள் ஏற்படுவதாக கிடைத்த தகவலையடுத்தே தாம் இந்த வழிமுறையை பிரேரிப்பதாக அவர் கொழும்பில் தெரிவித்தார்.

தாம் இவ்விடயம் தொடர்பாக சமாதான இயக்கத்தின் தலைவர் பேணாட் குணதிலகவுடன் பேசியிருப்பதாகவும் தெரிவிக்கும் குணதிலக,

இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் பின்னர் அதில் பங்குபற்றியவர்களுடன் நேர்காணல் செய்து அவற்றை மக்களிடம் கொண்டு செல்ல முயற்சிக்கப்போவதாகவும்,

இதனால் பேச்சுக்கள் தொடர்பாக சிங்கள மக்களிடையே எழும் தேவையற்ற பயத்தைப் போக்க முடியுமெனவும் கூறினார்.

# வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு தற்காலிக சாரதிகள், நடத்துநர்கள்

### உடன் நியமிக்க திலக் மாரப்பன உத்தரவு

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு தற்காலிக அடிப்படையில் சாரதிகளும் நடத்துநர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதற்கான பணிப்புரையை போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பல பஸ் வண்டிகள் - சாரதிகள், நடத்துநர்கள் இல்லாமையால் பயன்படுத்தப் படாமல் உள்ளன. அத்துடன் தற்போதுள்ள சாரதிகள் மேலதிக நேரசேவை செய்வதற்கு முன்வருவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப் படவிருக்கும் சாரதிகளும், நடத்துநர்களும் மாதாந்த ஒப்பந்த அடிப்படையிலேயே சேவையாற்றவுள்ளனர் என்றும் எமக்குக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வடமராட்சிக் கடலில் இந்திய மீனவரின் அத்துமீறலைக் கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

### கண்காணிப்புக் குழுவுக்குக் கடிதம்

(வடமராட்சி)

வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிக் கடற்தொழிலில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் - தமது கடற்தொழில் உபகரணங்களை அபகரித்துச் செல்வதாக வடமராட்சி மீனவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இச்சம்பவம் குறித்து சுப்பர்மடம் கடல்தொழில் சங்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப் புக் குழுவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளது.

அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த இருபது வருடங்களாக யுத்தச் சூழ்நிலை காரணமாக கடற்தொழிலில் சுதந்திரமாக ஈடுபட அனுமதிக்கப்படவில்லை. தற்போது அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் ஆழ்கடலில் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளபோதிலும் அத்துமீறி தொழில் ஈடுபடும் ஆயிரக்கணக்கான இந்திய றோலர்கள் எமது மீனவர்களின் பெறுமதி வாய்ந்த வலைகளை அறுத்துச் செல்கின்றன.

இதனால் எமது தொழிலாளர்கள் கடற்தொழிலில் ஈடுபட அச்சம் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த இருபது வருடங்களின் பின்பு சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின் நிம்மதியாக தொழில் செய்ய முடியும் என எதிர்பார்த்திருந்தபோதும் இந்திய மீனவர்களுடைய கட்டுமீறிய செயலால் எமது தொழிலாளர்கள் பல பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர் எனவும் -

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(23)

## அடிப்படை வசதிகளற்ற நிலையில் யாழ். திறந்த பல்கலைக்கழகம்

(ஊரெழு)

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் திறந்த பல்கலைக்கழகம் போதிய வளங்கள் இன்றி கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தின் அருகில் இயங்கிவருகின்றது.

நாட்டின ஏனைய பிரதேசங்களில் உள்ள திறந்த பல்கலைக்கழகங்கள் பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் பல்கலைக்கழகத் தரத்தில் இயங்கி வருகின்றபோதும் யாழ்ப்பாண திறந்த பல்கலைக்கழகம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இயங்கிவருகின்றது.

(96)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் வீதியைக் கடந்தவர் காயம்

(வடமராட்சி)

மாலை வேளையில் வீதியைக் கடக்க முயன்ற குடும்பஸ்தர் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த சிப்பாய் ஒருவர் சிறுகாயங்களுக்குள்ளானதாகத் தெரியவருகின்றது.

கடந்த 25ஆம் திகதி மாலை 6 மணியளவில் பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியில் இவ்விபத்து நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் தாளையடியிலிருந்து இடம்பெயர்ந்து தும்பளையில் வசிக்கும் வெலிச்சோர் இராசநாயகம் (வயது 65) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(23)

## கோயில் காணிகளைச் சுவீகரித்து குடியிருப்பாளருக்கு சொந்தமாக்குக!

### மாநகரசபை உறுப்பினர் விஜயரட்ணம்

(நமது நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள கோயில் காணிகளை அரசாங்கம், சுவீகரித்து, அவற்றில் குடியிருக்கும் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு யாழ்.மாநகரசபையின் உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

கோயில் காணிகளைச் சுவீகரித்துக் காணியற்ற ஏழைகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரிக்கு அவர் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

# மாநகர மேயராக பொறுப்பு வகிக்கும் போது நான் புறக்கணிக்கப்படுவது தற்செயலானதல்ல

*யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையன் ஒரு எளிமையான மனிதர். மாநகர முதல்வர் என்ற பொறுப்பில்- தனக்குரிய கடமைகளை செய்வதில் தான் என்றுமே ஆர்வம் கொள்வதாகக் கூறுகிறார். இனித் தொடர்கிறது அவருடனான சந்திப்பு:*




***கேள்வி***:பொதுச்சேவை என்று ஆரம்பித்த இளம் பருவ வாழ்க்கை, பின்னர் காலப்போக்கில் அரசியல் ஈடுபாட்டினையுடையதாக மாறி விட்டது. இந்நிலை பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

***பதில***: நான் எனது பள்ளிப் பருவத்திலேயே சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள் ஊடாக சமூகப் பணி ஆற்றத் தொடங்கி விட்டேன். கல்வி நிலை பூர்த்தியானதும் சமூகப் பணிக்கான ஒரு தளமாக நான் 38 வருடங்கள் ஆற்றிய மாநகர சபைப் பணியும் அமைந்தது. நான் புரிந்த பணி மூலம் பலதரப்பட்ட மக்களினதும் மன உணர்வுகளைத் தெரிந்து, தெளிந்து கொள்ளும் மனப்பக்குவம் எனக்கேற்பட்டது. அதன்மூலம் என் தொழில் மக்கள் பணிக்கான விதமாகப் பயன்பட்டது.

***கேள்வி***:தாங்கள் நகரத்தின் முதல் பிரஜை என்ற உயர் அந்தஸ்து கொண்டவராக, யாழ்.மாநகர முதல்வர் என்ற பதவியில் வீற்றிருக்கிறீர்கள். எனினும் அதி முக்கிய நிகழ்வுகள் சிலவற்றிற்கு (அவை மாநகர சபை எல்லைக்குள் நிகழ்கின்ற போதிலும்) தாங்கள் அழைக்கப்படுவதில்லை, புறக்கணிக்கப்படுகின்றீர்கள் என்ற மன ஆதங்கம் தங்களுக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. பகிரங்கமாகக் கூட இதனைத் தாங்கள் தெரிவித்து வருகிறீர்கள். இது பற்றி என்ன சொல்ல எண்ணுகிறீர்கள்?

***பதில***: இது உண்மை தான், யாழ்.மாநகர முதல்வராக உள்ள எனக்கு மிக முக்கிய நிகழ்வுகள் சிலவற்றிற்கு அழைப்பு அனுப்பப்படாததைத் தற்செயல் நிகழ்வுகளாக நான் கருதவில்லை. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு அழைக்கப்படாத நான் யாழ்.நகரில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவின் மாநாட்டிற்கும் அழைக்கப்படாது ஒதுக்கப்பட்டேன். இவற்றையெல்லாம் தற்செயல் நிகழ்வுகளாக என்னால் கருதமுடியவில்லை. ஆனால் ஒன்றை மாத்திரம் இக்கட்டத்தில் நான் சொல்லி வைக்க விரும்புகின்றேன். இத்தகைய நாகரிகமற்ற, இங்கிதமற்ற, மரபு மீறிய செயல்களால் என் மக்கள்பணி எந்த வகையிலும் பாதிக்கப்படப் போவதில்லை. இத்தகைய இழிவான புறக்கணிப்புகள் எனது மக்கள் பணிக்கு மேன்மேலும் உரமூட்டுபவையாக, வலுவூட்டுபவையாகவே அமையும். இது திண்ணம். நான் பொதுவாழ்வில் சந்தர்ப்பவசத்தால் புகுந்தவனல் லன். பொது வாழ்வில் இளம் வயதிலேயே பிரவேசித்து பல்வேறு சிரமங்கள், சவால்களை எதிர்நோக்கிச் சமாளித்து படிப்படியாக, அங்குலம் அங்குலமாக முன்னேறியவன். வெறும் ஆரவாரத்தில், சுய இலாபம் தேடுவதில் எனக்கு நம்பிக்கையில்லை. பணிவுடன் அதேவேளை துணிவுடன் மனசாட்சிக்கு, தெய்வத்திற்கு மாத்திரமே அடிபணிந்து பணிபுரிபவன் நான்.

***கேள்வி***:- தற்போது நிலவும் சுமுகமானதொரு சூழ்நிலையில் யாழ். முதல்வர் என்ற வகையில் தென்னிலங்கையைச் சேர்ந்த உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் பலரும் தங்களுடனான சந்திப்பை வலிந்து வந்து ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அண்மையில் தலவாக்கல நகர சபைத் தலைவர் கூட தங்களைச் சந்தித்திருந்தார். இத்தகையதொரு சந்திப்பு எவ்விதத்தில் ஆரோக்கியமானதெனத் தாங்கள் கருதுகிறீர்கள்?

***பதில்***:- தற்போதைய சுமுக நிலை எமது மக்களுக்கு நன்மை பயப்பதாக அமைய வேண்டும் என்ற நோக்கில் இத்தகைய சூழ்நிலையை நான் பெரிதும் வரவேற்கின்றேன். ஏனெனில் இத்தகையோர் இங்கு நேரில் வந்து எமது மக்கள் அடையும் துயர் நிலையை கண்டறிய வேண்டும். இன, மத, மொழி பேதமற்ற சேவை என்ற அடிப்படையில் கிடைக்கும் உதவிகளை எமது மக்களுக்குத் தக்கவிதத்தில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இத்தகையதொரு நட்புப்பாலம் தமிழ், சிங்கள மக்களிடையே இதுவரை நிலவிவந்த பரஸ்பர கசப்புணர்வு நீங்கவும், பரஸ்பரம் புரிந்துணர்வு வலுப்பட உதவுவதாகவும் அமைதல் சிறப்புத்தானே?

***கேள்வி***:- தங்கள் மாநகர சபையில் மாறுபட்ட கட்சிகளின் உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் எவ்விதம் சபை நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல தங்களால் முடிகிறது?

***பதில***:- எமது சபையில் எமது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு உள்ள உறுப்பினர்கள் 9 பேர். ஏனைய 3 கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கை 14. இந்தத் தன்மையில் ஒருவருக்கொருவர் முரண்பட்டு, பிடிவாதப் போக்கில் செயற்பட்டால் ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எதனையும் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றிச் செயற்படுத்த முடியாது. ஆதலினால் பெரும்பான்மை பலம் கொண்ட உறுப்பினர்களையும் அனுசரித்து, அவர்களது கருத்துக்களுக்கும் மதிப்பளித்து செயற்படுவதால் என்னால் என் பணியைச் செவ்வனே செய்ய இயலுகின்றது. இது மகிழ்ச்சிக்குரிய விடயம்.

***கேள்வி***:- வெற்றிடமாக உள்ள உறுப்பினர் பதவியை நிரப்பி, பிரதி மேயர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கோருகிறீர்கள். அது பற்றி...?

***பதில***:- ரவிராஜ் எம்.பியானதும் வெற்றிடமான உறுப்பினர் பதவி நிரப்பப்பட்டு, எனது பணிகளுக்கு உதவியாக பிரதிமேயராக என்னுடன் ஒத்துழைக்கக்கூடிய, செயலாற்றலுள்ள ஒருவரை நியமிக்க வேண்டுமென த.வி.கூட்டணி செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் அண்மையில் யாழ். வந்திருந்த போது நேரில் கோரிக்கை விடுத்தேன். கூட்டணியின் மத்திய குழுவிலும் இது பற்றிப் பிரஸ்தாபித்தேன். சாதகமான பதிலை எதிர்பார்த்திருக்கிறேன்.



**செ.கந்தையன்**
**(யாழ். மாநகர முதல்வர்)**

எம்.பி பதவி ஒன்று வெற்றிடமானால் அதனை நிரப்புவதற்கு பரபரப்பு மிக்க செயற்பாடுகள் பல கோணங்களில் முன்னெடுக்கப்படும். கருத்துமோதல்கள் வெடிக்கும், அளவிற்கு மீறிய அவசரம் காட்டப்படும், ஆனால் இந்த மல்லுக்கட்டெல்லாம் பிரதிமேயர் நியமன விடயத்தில் காட்டப்படவில்லை. இத்தகைய நிலை ஏற்படவேண்டும் என நான் விரும்புவதாக, நான் இவ்வாறு கூறுவதால் பொருளாகாது. உரிய வேளையில், மக்கள் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு உள்ள முக்கிய பதவி ஒன்று நீண்ட நாட்களாக நிரப்பப்படாது இழுத்தடிக்கப்படுவதனை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. எனவே சுமுகமானதொரு நிலை இவ்விடயத்தில் விரைவில் ஏற்படும், ஏற்பட வேண்டும் எனது விருப்பமாகும்.

***கேள்வி***:- உங்கள் பணியில் கடந்த காலங்களில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்கள் என்று எதையாவது குறிப்பிட விரும்புகிறீர்களா?

***பதில***:- நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் சவால்கள் ஒன்றும் எனக்குப் புதிதல்ல. அவற்றை எதிர்கொள்ளும் மனோவலிமையை எனக்கு இறைவன் தந்துள்ளான். தீமையை வரவேற்கமாட்டேன், அனைவரையும் அனுசரித்தே செயற்பட விரும்புகிறேன். என்னை எவரும் பகடைக் காயாகப் பயன்படுத்த இடமளிக்க மாட்டேன். நான் பின்கதவு நிலையை விரும்பமாட்டேன். நேர்மை நிலைக்கும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.

***கேள்வி***:- தமிழரின் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழரின் முதுசொம், சொத்து - கல்வியும், கடவுள் நம்பிக்கையும் எனப்படுகிறது. ஆனால் தற்போதைய இளம் சமுதாயம் இவற்றினின்றும் மாறுபட்டு, பெற்றோரை, பெரியோரைக் கனம் பண்ணாது நடப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறதே. ஓர் குடும்பத்தலைவன், மாநகர முதல்வர் என்ற வகையில் இது பற்றிய தங்கள் கருத்து...?

***பதில***:- இது மிக வேதனைக்குரிய நிலைதான். இளம் சந்ததியின் சீரிய வாழ்வுக்கான பொறுப்பு சமூக அமைப்புகள், புத்திஜீவிகள் போன்றோரையும் சார்ந்ததாகும் . அவர்களது மனதில் நற்கருத்துக்களைப் புகுத்த நடவடிக்கைகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவிடயத்தில் தமக்குள்ள பொறுப்பை எவருமே தட்டிக் கழித்து விடமுடியாது, தட்டிக் கழித்து விடவும் கூடாது. இது ஒரு பெரும் சமூகப்பிரச்சினை எதிர்காலம் பொற்காலமாக அமைய ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டியது இன்றியமையாதது.

**நேர்காணல்:- ஸ்ரீநடா**

# யாழ்ப்பாண நகருக்கு மிக அண்மையிலுள்ள மக்கள் குடியேறாத "இராணுவக் கிராமங்கள்"

**கொ**ழும்புத்துறை பல சிறு கிராமங்களை உள்ளடக்கிய ஒரு பகுதியாகும். இப்பகுதியினுள் மணியந்தோட்டம், உதயபுரம், வசந்தபுரம் எனும் கிராமங்களும் உள்ளடங்குகின்றன. இக்கிராமங்களினுள் வசந்தபுரம், உதயபுரம் எனும் கிராமங்கள் முழுமையாக கரையோரப் பகுதிகளைச் சார்ந்தவை.



**இப்பகுதியில் அழிவுற்ற நிலையில் காணப்படும் வீடு**

**ம.மோகன்ராஜ்**

மணியந்தோட்டப் பகுதியானது இவ்விரண்டு கிராமங்களுக்கும் இடைப்பட்டது. இப்பகுதி மக்கள் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர்-2 இராணுவ நடவடிக்கையால் ஏனைய பகுதி மக்களைப்போல் இடம் பெயர்ந்தார்கள். ஆனால் இன்று வரை தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர இராணுவத்தால் அனுமதி வழங்கப்படவில்லை.

இக்காலப்பகுதியில்- எந்தவொரு வசதிகளும் செய்து கொடுக்கப்படாத நிலையில் பின்தங்கிய இக்கிராம மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியில், ஈச்சமோட்டை, பாஷையூர், கொய்யாத்தோட்டம், குருநகர் போன்ற அண்டிய பகுதிகளிலும் மேலும் பலர் வன்னியிலும் வசித்து வருகின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோரின் வசிப்பிடமாக இரவல் வீடுகளும் முகாம்களுமாகக் காணப்படுகின்றன. தற்போது ஏற்பட்டுள்ள சமாதான நிலையினைத் தொடர்ந்து வீட்டுரிமையாளர்களின் எதிர்பார்க்கப்படாத வரவினால் வதிவிடங்களற்று நடுவீதிக்கு வந்துள்ளனர்.

சொந்த வதிவிடங்களில் வசிக்க முடியாத நிலையில் அரசாங்கமாயினும் பொது அமைப்புக்களாயினும் இவர்கள் மீளக்குடியமர வழிவகை செய்ய முன்வரவில்லை. இக்கிராமப்பகுதியில் மிதிவெடிகள், கண்ணிவெடிகள் மட்டுமல்ல ஷெல்கள், விமானக்குண்டுகளும் தாராளமாக விதைக்கப்பட்டுள்ளன.

இவற்றையெல்லாம் அகற்றி இப்பகுதி மக்கள் மீளக்குடியமர இராணுவம் அனுமதிக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் இப்பகுதியில் குறிப்பாக வசந்தபுரம், மணியந்தோட்டம் போன்ற பகுதிகளில் பாரிய இராணுவ முகாம்கள் உள்ளன, இம்முகாம்களை அப்புறப்படுத்துவதற்கு இராணுவம் முன்வருமா? அப்படி முன்வந்தாலும் யுத்தத்தால் அழிவடைந்த இப்பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பி இம்மக்களுக்கு நல்வாழ்வையளிக்க அரசாங்கம் மற்றும் பொது அமைப்புக்கள் எங்ஙனம் வசதியளிக்கப் போகின்றன? இவ்வாறான பல வினாக்களை உள்ளத்தில் தாங்கி வறுமையின் பிடியில் சிக்கி சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வரும் இம்மக்களுக்கு யார்தான் விடிவைப் பெற்றுத்தரக்கூடும்?

(58)

## செய்திக் கட்டுரை

# காஞ்சிரங்குடா படுகொலைகள், நீதிமன்ற விசாரணைகள் இன்று!

(நமது நிருபர்)

காஞ்சிரங்குடாவில் விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில ஏழு பொதுமக்கள் உயிரிழந்த சம்பவ் தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் இன்று ஆரம்பமாகின்றன.

அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நீதவான் எம்.வை.எம். இஸஸதீன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சம்பவத்தில் பாதிக்கப்பட்டோரின் சார்பில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தைச் சேர்ந்த சட்டத்தரணி மனோகரன் ஆஜராகவுள்ளார்.

இன்றைய விசாரணைக்கு - சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

# பேராசிரியர் மௌனகுருவுக்கு மணிவிழா நடத்த ஏற்பாடு

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர் சி.மௌனகுருவின் 50 ஆண்டு கால சேவையைப் பாராட்டும் மணிவிழா கௌரவிப்பு தொடர்பான ஆரம்பக் கூட்டம் - நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு கத்தோ லிக்ககழக மண்டபத்தில் மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

இதில் ஆரம்பச் செயற்குழு அங்கத்தவர்களாக சண்.தவராசா, கலாநிதி. செ.யோகராஜா, கலாநிதி மன்கிளி முருகதாஸ், ஜே.கெனடி, த.ஆறுமுகம், முருகு தயானந்தன், சீவரெட்ணம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இம்மணிவிழாத் தொடர்பான அடுத்த கூட்டம் நவம்பர் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

# வெங்காயச் செய்கையில் உரும்பிராய் விவசாயிகள்

(ஊரெழு)

ஊரெழு, கரந்தன் பிரதேசத்தில் விசாயிகளால் வெங்காயச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.

தற்போதைய பருவ மழையை அடுத்து பாரிய நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடந்த வருடத்தில் இப்பகுதியில் உள்ள விவசாயிகள் பம்பாய் வெங்காய உற்பத்திகளை மேற்கொண்டு வெற்றிகண்டமை குறிப்பிடத்தக்கது.

# கூடங்குளம் அணுமின் நிலையத்தால் இலங்கைக்கு பேராபத்து ஏற்படும்!

(கொழும்பு நிருபர்)

தமிழகத்தின் கூடங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள அணுமின் உலை இலங்கைக்கு பேராபத்தாக அமையும் என அணுமின் உலை எதிர்க்கும் அமைப்பைச் சேர்ந்த ஜோர்ஜ் கோம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இச்சம்பவம் தொடர்பாக விழிப்பூட்டுவதற்காக கொழும்பு வந்து- சூழலியல் இயற்கை வள அமைச்சர் சேனநாயக்காவைச் சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் முதல் இரண்டு அணு உலைகள் அப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் 2007 ஆம் ஆண்டளவில் ஆறு அணுமின்உலைகள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தின் தெற்குக் கரைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாகவும் குமரிமுனைக்கு அருகில் இவ் அணுமின் உலை அமைந்து இருப்பதால் பாக்குநீரிணையைப் பாதிக்கும்; இதனால் கடல்வளம் மிகவும் மோசமான பாதிப்புக்குள்ளாகும்; இது இலங்கைத் தீவையும் பெரியளவில் பாதிப்புக்குள்ளாக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கூடங்குளத்தில் அமைந்துள்ள அணுமின் உலையில் கசிவு ஏற்படுமானால் மன்னார் குடாவை அண்டிய பிரதேசங்கள் முற்றாக அழியும் அபாயம் உள்ளதாகவும் ஏனைய பிரதேசங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இது சம்பந்தமான விடயத்தில் தமிழக அரசு மௌனம் சாதித்து வருகின்றது எனவும் இந்த அபாயத்தைச சுட்டிக்காட்டும் வகையில் சிறிலங்கா அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அவர் அங்கு தெரிவித்துள்ளார்.

# காஞ்சிரங்குடா - அதிரடிப்படை முகாமை உடனடியாக மூட உத்தரவிடுங்கள்

## ரணிலுக்கு பொது ஊழியர் முன்னணி கடிதம்

(நமது நிருபர்)

காஞ்சிரங்குடா- விசேட அதிரடிப்படை முகாமை உடன் மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கைப் பொது ஊழியர் முன்னணி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை மகஜர் மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி தொழிற் சங்கம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

திருக்கோவிலிலும், திருகோணமலையிலும் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டிருப்பது கண்டிக்கத்தக்கது. தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் படையினர் சிலர் இரத்த வெறி கொண்டு அலைகின்றனர் என்பதையே மேற்படி சம்பவங்கள் காட்டுகின்றன.

படையினரைக் கட்டுப்படுத்தும் கடிவாளம் தன்னிடமே இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா கூறிக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் சமாதானத்தைக் குழப்பும் நோக்குடன் சில படையினர் செயற்பட்டு வருகின்றனர் என்பது தெளிவாகியிருக்கின்றது.

இத்தகைய நிலையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இன்றேல் முடிவற்ற யுத்தத்துக்குள் நாடு தள்ளப்படும் என அந்த மகஜரில் கூறப்பட்டிருக்கின்றது.

## 10 அருட்சகோதரர்களுக்கு தியாக்கோன் பட்டம்

(நாவாந்துறை)

யாழ். மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் 10 பேர் தியாக்கோன்களாக எதிர்வரும் நவம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் புனித சவேரியார் குருத் துவக் கல்லூரியில் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

ஏ.கே.அமல்ராஜ், எம்.கான்ஸ்போவர், சி.ஜஸ்ரின், எம்.சோபன்ரூபஸ், ரி.ஆர்.வசந்தசீலன், எஸ்.லியோ ஆம்ஸ்ரோங், எச்.நேசநாயகம், எஸ்.ஆர்.ரஞ்சித்ராஜ், எம்.ரீ.சஜ் ஜீவன், ரி.ரவிராஜ் ஆகியோரே தியாக்கோன் பட்டம் பெறவுள்ளனர். (66)

## கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

அம்மன் கோவிலடி, கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இராசதுரை கணேசலிங்கம் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், கூவில், கிரிமலையைச் சேர்ந்த தேவகுமாரி மன்மதராஜாவினுடைய விசேட அடையாள அட்டையும், மாவிட்டபுரம் தெல்லிப்பழையைச் சேர்ந்த சுஜிதா குணபாலசிங்கத்தினுடைய தேசிய, விசேட அடையாள அட்டைகளும் கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

# பஸ்தரிப்பிடமின்மையால் கொக்குவில் மக்கள் அவதி

கொக்குவில் சந்தியில் பஸ் தரிப்பு நிலையம் இன்மையால் மழைக்காலத்தில் மாணவர்களும் பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களிற்கு பலமுறை அறிவித்தும்- எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## மாலு சந்தி-மந்திகை வீதியில் கற்குவியல்களால் போக்குவரத்து பாதிப்பு

(வடமராட்சி)

மாலுசந்தியிலிருந்து மந்திகை வரையான வீதியை திருத்துவதற்காக பறிக்கப்பட்டுள்ள கல்லினால் வீதியால் போக்குவரத்துச் செய்வோர் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறைக்கான பிரதான வீதியில் அமைந்துள்ள இவ் வீதியை திருத்துவதற்காக கற்குவியல்கள் போடப்பட்டுள்ளன.

சனநெருக்கடி உள்ள இவ்வீதியால் போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்கள், லொறிகளுடன் பயணிகள் விலகிச் செல்லமுடியாது காத்திருக்க வேண்டியுள்ளது.

கற்குவியலுக்கு மேலாகவாகனங்கள் ஏறிச்செல்வதால் கற்கள் வீதிகளில் சிதறிப் பரந்து காணப்படுகின்றன.

இதனால்- இவ் வீதியால் பயணிக்கும் பாதசாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (23)

# பருத்தித்துறை பிரதேச சபையை இரண்டாக பிரிக்குமாறு தீர்மானம்

(வடமராட்சி கிழக்கு)

பருத்தித்துறைப் பிரதேச சபையை வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு என இரண்டு பிரதேச சபைகளாக பிரிக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேசசபை- மாகாண சபையின் உள்ளூராட்சி அமைச்சரையும், வடக்கு கிழக்கு மாகாண ஆளுனரையும் கேட்டுள்ளது.

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலகப் பகுதியையும், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் இரண்டையும் ஒன்றாக இணைத்தே தற்போது பருத்தித்துறைப் பிரதேச சபையாக இயங்கி வருகின்றது. இதனால் பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயற்பாட்டிற்கு பல்வேறு பிரச்சினைகள் உருவாகி வருகின்றன. இதனால் இப் பிரதேச சபையை இரண்டாகப் பிரிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக 1999ஆம் ஆண்டு பருத்தித்துறைப் பிரதேச சபை- மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தது. உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத் தீர்மானம் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபை தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் மேலும் சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (17)

# ஆத்துமாக்கள் தினத்தையொட்டி புனிதமரியாள் சேமக்காலை புனரமைப்பு

(நமது நிருபர்)

எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ள இறந்த ஆத்துமாக்கள் தினத்தை முன்னிட்டு யாழ்.மரியாள் சேமக்காலை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி அனுசரிக்கப்படும் கத்தோலிக்கர்களின் இறந்த ஆத்துமாக்கள் திருநாளை முன்னிட்டு யாழ்.மரியாள் சேமக்காலைப் பகுதியை சூழவுள்ள பிரதேசம் துப்புரவு செய்யப்படுவதுடன் சேமக்காலை புனரமைக்கப்பட்டும் வருகின்றது.

இங்கு எதிர்வரும் 2ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இறந்த சகல ஆத்துமாக்களின் இளைப்பாற்றிக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவிருப்பதுடன் ஏனைய கத்தோலிக்க ஆலயங்களிலும் திருப்பலி ஆராதனைகள் நடைபெறவிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (லி)

## சாவகச்சேரி சிவன் ஆலய பூசைகள் ஆரம்பம்

(சரசாலை)

இரண்டரை வருடகால இடைவெளிக்கு பின் சாவகச்சேரி சந்திரசேகர வாரி வனநாத சிவன் கோவிலில் இன்று தொடக்கம் பூசைகள் நடைபெறவுள்ளன.

இன்றுகாலை 10.00 மணிக்கு பிராயச்சித்த அபிடேகம் நடைபெற்று பூசைகள் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (34)

# இன்றையநாள் இனியநாள்

**28.10.2002 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம்:- | தேகசுகக்குறைவு, வாகனச்செலவு, மாதா தேகசுகக குறைவு, கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| இடபம்:- | தேகசுகம் நன்று, பணவரவு, இளையசகோதரம் வரவு, எடுத்தகாரியம் வெற்றி, கல்விச் சமநிலை, வியாபாரம் சமநிலை. |
| மிதுனம்:- | தேகசுகம் நன்று, தேவையற்ற செலவு, தொழிலில் மந்தநிலை, மனச்சஞ்சலம், கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம்:- | தேகசுகம் சமநிலை, தெய்வ வழிபாடு, மன அமைதி, உறவினர் சந்திப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம்:- | தேகசுகம் குறைவு, வீண்செலவு, மனச்சஞ்சலம், தேவையற்ற பிரச்சினை தேடிவரும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கன்னி:- | தேகசுகம் நன்று, பணவரவு, பெண்களால் மகிழ்ச்சி, தெய்வ தரிசனம், சமய அறிஞர் தரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| துலாம்:- | தேகசுகம் நன்று, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, கௌரவம், கல்வி சமநிலை, வியாபார முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| விருச்சிகம்:- | தேகசுகம் குறைவு, வைத்தியச்செலவு, தேவையற்ற பிரச்சினை, பிதாவுடன் கருத்து வேறுபாடு, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை. |
| தனு:- | தேகசுகக் குறைவு, வீண்செலவு, எதிர்பாராதபயம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம்:- | தேகசுகம் நன்று, வாகனவசதி, பெண்களினால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் முன்னேற்றம். பணவரவு. |
| கும்பம்:- | தேகசுகம் நன்று, பணவரவு, எதிரி தலைகுனிவு, எடுத்த காரியம் வெற்றி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மீனம்:- | தேகசுகக் குறைவு, வைத்தியச் செலவு, புத்திரர் தேகசுகக் குறைவு, கல்விச் சமநிலை, வியாபார முன்னேற்றம். |

# ஊவா மாகாணத்திலிருந்து சமாதானக் குழு யாழ்.வரும்

(வடமராட்சி)

ஊவா மாகாணத்திலிருந்து சமாதானக்குழு யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது.

தமிழ், முஸ்லிம், சிங்களக் கல்வியாளர்கள், கல்வி அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள் அடங்கிய 30 பேர் கொண்டகுழுவினரே யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

சிலதினங்கள் தங்கியிருக்கும் இவர்கள் குடாநாட்டில் யுத்தத்தினால் பாதிப்படைந்த பாடசாலை மாணவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர். நாளை வடமராட்சி பிரதேசத்தில் யுத்தினால் பாதிப்படைந்த நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், ஹட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றுக்கு சென்று பார்வையிடுவதுடன் மாணவர்களை சந்தித்துக் கலந்துரையாடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது (23)

## திராட்சைக் கொடிகளில் நோய்த்தாக்கம் விவசாயிகள் நட்டமடையும் நிலை

(ஊரெழு)

தொடர்ச்சியான பருவமழை காரணமாக ஊரெழு பகுதியில் பாரிய அளவில் செய்கை பண்ணப்பட்ட திராட்சைக் கொடிகளில் நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது. பருவமழையை அடுத்து ஏற்படும் கடுமையான வெய்யில் காரணமாக பழங்கள் வெடித்தும் அழுகியும் பெரியளவில் சேதமடைந்து வருகின்றன.

இதனால் திராட்சைச் செய்கையாளர்கள் நட்டம் அடைந்துள்ளனர். (96)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அண்மையில் மீளக் குடியமர்ந்தோருக்கு தற்காலிக குடியிருப்பு வசதிகள்!

## செயலகத்தில் வியாழன்று விசேட மாநாடு!

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் அண்மையில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு தற்காலிகக் குடியிருப்புக்கள் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் சுமார் முப்பதாயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் அண்மையில் மீளக்குடியமர்ந்துள்ளன.

இக்குடும்பங்களில் அனேக மானவர்கள் இருப்பிட வசதிகள் எதுவும் இன்றி அவதிப்படுகின்றனர்.

இவ்வாறான குடும்பங்களுக்கு அரைநிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பான விசேட கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் எதிர் வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பிரதேச செயலர்கள் ஆகியோர் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர். (க)

SERVO
World - Class Engine Oils
சேர்வோ
உலகின் அதிசிறந்த இயந்திர எண்ணெய்
வடமாகாண விற்பனை விநியோகஸ்தர்
THAMPI HOLDINGS (PTE) LTD.
HOTLINE:0777-382343, 072-401423, 01-343125
(சி.052)

# கூட்டணி வேறு; கூட்டமைப்பு வேறு;! எமக்கென்று தனித்துவம் உண்டு!!

## பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்த சங்கரி பேச்சு

(நமது நிருபர்)
தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். தலைமை அலுவலகத்தில் நேற்றுக் காலை ''அண்மைக்கால அரசியல் நிலவரம்''தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக் கலந்துரையாடல் கட்சி ஆதரவாளர் ப.இராஜகுரு தலைமையில் நடைபெற்றது.

இதில் கட்சி ஆரம்பகால உறுப்பினர் எஸ். முத்துலிங்கம், பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி, பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

காலை 10 மணிக்கு ஆரம்பமான இக்கலந்துரையாடலில் கட்சித் தொண்டர்களால் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் உரை நிகழ்த்தினார்

அவர் தனது உரையில்- தமிழ்க் கூட்டமைப்பினதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் அண்மைக்கால நடவடிக்கைகள் பற்றியும் நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் பற்றியும் கட்சி ஆதரவாளர்களுக்கு எடுத்து விளக்கினார்.

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவருமான வீ. ஆனந்தசங்கரி உரை நிகழ்த்துகையில்-

அடுத்த முறை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு கூடிய அளவு நிதி ஒதுக்கப்படுமாயின் நாம் அதனை எதிர்த்து வாக்களிப்போம் என்றார். அங்கு அவர் தொடர்ந்து பேசும் போது- ஈழத்துக்காந்தி எனப் போற்றப்பட்ட தந்தை செலவாவின் தலைமைத்துவத்தில் வளர்ந்தது கூட்டணி. எனவே கூட்டணி என்றைக்கும் தனது இலட்சியத்தை, கொள்கையை, தனித்துவத்தை நோக்கியே செல்லும். கூட்டணி வேறு; கூட்டமைப்பு வேறு. இரண்டுக்கும் சின்னம் வேறு, பதிவு வேறு, கொள்கை வேறு. கூட்டமைப்பை ஓர் கட்சியாகப் பதிய வேண்டும் எனவும் பலர் முயற்சித்தனர். ஆனால் நான் இதற்குசட சம்மதிககவில்லை என்றும் அவர் கூறினார். இக் கலந்துரையாடலில் நூற்றுக்கு மேற்பட்ட கட்சி ஆதரவாளர்களும் கலந்து கொணடிருந்தனர். (லி)

### யாழ். நகரக்....

எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே- இப்பகுதிகளில் உள்ள படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்திலும் படைநிலைகளிலும் தேவையான மாற்றம் செய்து கொள்வதற்கு படைத்தரப்பு கொள்கையளவில் சம்மதம் தெரிவித்துள்ளது. எனினும் கடற்கரையில் இருந்து சுமார் 100 மீற்றர் வரையான தூரம் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாகவே பேணப்படவுள்ளது. இவ்வாறு படை நிலைகள் அகற்றப்பட்டதும் அப்பகுதிகளில் அடுத்த கட்ட நடவடிக்கையாக வெடிபொருட்கள் அகற்றப்பட்டு மீளக்குடியமர்வுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொளளப்படவுள்ளன.

நாளைய தினம் மேற்படி பகுதிகளுக்கு நேரடியாகச் செல்லும் படை அதிகாரிகளும் பிரதேச செயலர்களும் குறிப் பிட்ட பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வுக்குச் சாத்தியமான பகுதிகளை அடையாளம் கண்டு கொளவர். அத்துடன் தொடர்ந்து உயர் பாதுகாப்பு வலயமாக பேணப்பட வேண்டிய பகுதிகளுக்கான எல்லைகளையும் குறித்துக் கொள்ளவுள்ளனர். (க)

# மயானத்தில் பிணம் எரிப்பவர் கால்முறிந்த நிலையில் சடலமாக மீட்பு

## ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அருகில் சம்பவம்

(வடமராட்சி கிழக்கு)
ஆனைவிழுந்தான் மயானத்தில் பிணம் எரிப்பவர் இனந்தெரியாத முறையில் மரணமடைந்து வீதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த பெரியான் மாணிக்கம் என்ற 70 வயது வயோதிபர் ஆனை விழுந்தான் மயானத்தில் பிணம் எரிக்கும் தொழிலை செய்து வந்தார்.

இவர் நேற்று முன்தினமும் வழமையாக தனது தொழிலுக்குச் சென்றுவிட்டு இரவு 11 மணியாகியும் வீடு திரும்பாததால் பதற்றமடைந்த உறவினர்கள் இவரைத் தேடிவந்த போது இவர் சடலமாக மயானத்தின் அருகில் கிடந்ததை கண்டனர்.

இடது கால் முறிந்த நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ள இவரது சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணை நடைபெற்றது. பருத்தித்துறை நீதவான் இந்த மரணம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார். (17,13)

# வவுனியா கலாசார மண்டபத்திலிருந்து இராணுவத்தை வெளியேறக் கோரிக்கை!

## வன்னிப் பிரதேச படைத் தலைமையிடம் புலிகள் விடுத்தனர்

(நமது நிருபர்)
வவுனியா குடியிருப்பில் உள்ள கலாசார மண்டபத்தில் இருந்தும் நேரியக்குளம் - மாங்குளம் வைத்தியசாலையில் இருந்தும் படையினரும் பொலிசாரும் வெளியேறி அவற்றை பொதுமக்களின் பாவனைக்கு விட வேண்டும் என விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர், வன்னிப் பிராந்திய பாதுகாப்பு படையின் தலைமையகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சனிக்கிழமையன்று வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் வவுனியா மாவட்டச் செயலாளர் மூர்த்தி ஆகியோர்- வன்னி ஆயுதப்படைகளின் தளபதியின் உதவியாளராகிய கேணல் விதானகே மற்றும் கேணல் சேனநாயக்க ஆகியோருடன் நடத்திய கலந்துரையாடலின் போதே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது. வவுனியா கண்டி வீதியில் உள்ள ரம்யா ஹவுஸ் இராணுவ அலுவலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது- கண்ணாட்டியைச் சேர்ந்த இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் திரும்பி வந்து குடியேறவும், தமது வயல்களில் விவசாயம் செய்யவும் அனுமதியளிக்கப்பட வேண்டும் எனவும், இராணுவ அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி- இராணுவத்தினர் பொதுமக்களின் வாழ்விடங்கள், பொதுக் கட்டங்கள், அரச கட்டங்களில் இருந்து வெளியேறாமல் இருப்பது பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் இடைஞ்சலாக இருப்பதாகவும், அரசு - விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை படையினரே மீறி நடப்பதனால் பொது மக்கள் மத்தியில் சமாதான முயற்சிகள் குறித்து சந்தேகம் எழுந்துள்ளதாகவும் விடுதலைப் புலிகளின் தரப்பில் இச்சந்திப் பின் போது சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து வவுனியா குடியிருப்புக் கலாசார மண்டபத்தினுள் உள்ள படையினர் இன்னும் இருவார காலப்பகுதிக்குள் அங்கிருந்து வெளியேறி விடுவார்கள் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், நேரிய குளம் வைத்தியசாலையைப் பொதுமக்களின் பாவனைக்கு விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும இராணுவ அதிகாரிகள் இந்தச் சந்திப்பின்போது, உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை
ஐயரத்தினம் நினைவு நாளும்
கனிட்ட பிரிவு பரிசளிப்பு விழாவும்

தலைவர்: திரு.பொ.சுந்தரலிங்கம் (அதிபர்)
இடம்: கல்லூரி மண்டபம்
காலம்: 2002-10-29 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி
பிரதம விருந்தினர்:
திரு.இ. கிருபானந்தன் அவர்கள்
(Managing Director, Positive Business Consultants(pvt)Ltd)
(தலைவர், பழைய மாணவர் சங்கம், கொழும்புக் கிளை)

சிறப்பு விருந்தினர்:
திரு.கா.சந்திரபாலன் அவர்கள்
(உதவிக் கல்விப்பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

நினைவுப் பேருரை:
செல்வி ஜெயரஞ்சினி இராசதுரை M.A. அவர்கள்
(Sub.Warden, University of Jaffna)

பரிசில் வழங்கல்: பிரதம விருந்தினர் அவர்கள்

நன்றியுரை: திரு.சு.இராமலிங்கம் அவர்கள்
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
ஊழியர்கள். (018)

விளம்பர அன்பளிப்பு:
ரட்ணாஸ் வைண்டிங் வேக்ஸ் 219, ஸ்ரான்லி வீதி, யாழ்.
மகா சில்க்ஸ் 40A, 32, நவீன சந்தை யாழ்ப்பாணம்.
பியூட்டி சில்க்ஸ் 69, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

### புதிய...

வெளியாகியுள்ளது.

தற்போது இராணுவத்தின் பிரதம தலைமை அதிகாரியாக உள்ள மேஜர் ஜெனரல் குணவர்த்தனவுக்கு டிசெம்பர் 3ஆம் திகதியுடன் 54 வயது பூர்த்தியாகின்றது.

ஒரு மேஜர் ஜெனரல் தர அதிகாரி 3 வருடம் சேவையுடன் 1 வருட சேவைக்கால நீடிப்பை மட்டுமே பெற முடியும் மேஜர் ஜெனரல் குணவர்த் தன 54 வயதைப் பூர்த்தி செய்வ தால் அவருக்கு சேவை நீடிப்பு வழங்க முடியாதென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

எனினும் - மேஜர் ஜெனரல் குண வர்த்தன ஐ.தே.கவின் ஆதரவாளர் என்பதாலேயே இப்பதவியை வழங்கு வதற்கு ஜனாதிபதி எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்.

இதைவிட இன்னொரு காரணமும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்தபோது மேஜர் ஜெனரல் லோகான் குணவர்த்தன அவருக்கு முன்பாக மேசை மீது காலைப் போட்டுக் கொண்டு கதைத்ததாக ஜனாதிபதி சந்திரிகாவிடம் புகார் செய்திருந்தார்.

இந்த மூன்று காரணங்களுக்காகவே ஜனாதிபதி சந்திரிகா மேஜர் ஜெனரல் குணவர்த்தனவை இராணு வத் தளபதியாக நியமிப்பதற்கு மறுப்புத் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை - இவருக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்கினால் எட்டு மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிப்பு வழங்க வேண்டியி ருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டி ருக்கிறது.

# தூதரகம் பொறுப்பேற்க முன்வராததால் இந்திய மீனவர்கள் தொடர்ந்தும் சிறையில்

(வடமராட்சி)
யாழ்.சிறைச்சாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் நால்வரையும் இந்தியத் தூதரகம் பொறுப்பேற்க இன்னமும் முன்வராததை அடுத்து யாழ். சிறைச் சாலையில் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை பாதுகாப்பில் வைத்திருக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடலில் வழிதவறி வந்து கடற்படையிரால் மீட்கப்பட்ட நான்கு இந்திய மீனவர்கள் கடந்த 22ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது 25 ஆம் திகதி வரை சிறைச்சாலையில் பாதுகாப்பாக வைததிருக்க நீதிமன்றம் பணித்ததுடன், நால்வரையும் இந்திய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. நால்வரையும் தூதரகம் பொறுப்பேற்காமையால் அவர்களை எதிர்வரும் 6ஆம் திகதி வரை சிறைச்சாலையில் பாதுகாப்பாக வைக்க நீதிமன்றம் பணித்துள்ளது. (23)

### எட்டு...

மாறு கோரியுள்ளபோதும் ஜனாதிபதி இதுவரை அதற்கு இணங்கவில்லை எனத் தெரியவருகிறது. இதனையடுத்து தாம் சேவையில் இருந்து இளைப்பாறிச் செல்ல வேண்டுமெனில் அது குறித்து ஒரு மாதத்துக்கு முன்னரே அறிவிக்கவேண்டும் என இந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.